பொது சன நூலகம்
13 MAY 1998
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13 வள்ளுவர் ஆண்டு 2029 சித்திரை 30 (13-05-1998) புதன்கிழமை UTHAYAN– Akively National Tamil Daily கதிர்:142

# புளொட் தளபதி, 4 உறுப்பினர்கள்

# வவுனியாவில் கிளைமோருக்கு பலி!

## பொதுமக்கள் இருவரும் மரணம் எண்மர் படுகாயமுற்றனர்

வவுனியா, மே. 13

வவுனியா கோயில்குளம் பகுதியில் நேற்றுக்காலை 11.40 மணியளவில் புளொட் உறுப்பினர்கள் பயணம் செய்த வாகனம் ஒன்று கிளைமோர் தாக்குதலுக்கு இலக்கானது.

இந்தத் தாக்குதலில் புளொட் அமைப்பின் வவுனியா மாவட்ட இராணுவத் தளபதி மற்றும் நான்கு புளொட் உறுப்பினர்கள் உட்பட ஏழு பேர் உயிரிழந்தனர்; எட்டுப் பேர் காயமடைந்தனர்.

மன்னாருக்குச் சென்றிருந்த புளொட் அமைப்பின் மூத்த உறுப்பினர்கள் இரு வாகனங்களில் ஹொரவப்பொத்தானை வீதியால்வந்து கோயில்குளம் சந்தியில் திரும்பி, உமாமகேஸ்வரன் வீதியால் சென்ற சமயம் வீதியில் வைக்கப்பட்டிருந்த இரு கிளைமோர் கண்ணிகள் வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கிளைமோர் தாக்குதலுக்கு இலக்கான வாகனம் வீதியில் இருந்த கம்பம் ஒன்றுடன் மோதி நின்றது.

அந்த வாகனத்தில் இருந்தவர்கள் பெரும் சிரமங்களுடன் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது,

அப்பகுதியில் நின்ற 2 மாடுகளும் குண்டுவெடிப்பில் சிக்கி இறந்தன. அருகில் இருந்த வீடும் சேதத்துக்குள்ளானது.

புளொட் அமைப்பின் வவுனியா மாவட்ட இராணுவத் தளபதி தாஸ்(செல்லத்துரை சாந்தகுமார்) மற்றும் அந்த அமைப்பின் உறுப்பினர்களான விந்தன், யூலியன் லோறன்ஸ், மயூரன், நிமலன் ஆகியோரும் —

ரியூசனுக்குச் சென்றுகொண்டிருந்த மாணவி ஸ்ரீசோதியா வடமலை(வயது 17), சந்தைக்குப் பொருள் வாங்கச் சென்ற வீரசிங்கம் சண்முகசேஸ்வரி (வயது 17 – நீர்வேலியைச் சேர்ந்தவர்)

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மயிரிழையில் தப்பினார் மாணிக்கதாசன்!

வவுனியா, மே 13

நேற்று வவுனியாவில் இடம்பெற்ற கிளைமோர் கண்ணித் தாக்குதலில் புளொட் அமைப்பின் உப தலைவரும், இராணுவப் பிரிவுத் தலைவருமான மாணிக்கதாசன் மயிரிழையில் தப்பியதாக வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமது அமைப்பின் முக்கிய பிரமுகர்களுடன் மன்னாருக்குச்சென்றிருந்த மாணிக்கதாசன் இரு வாகனங்களில் அங்கிருந்து வவுனியா திரும்பினார். ஹொரவப்பொத்தானை வீதி வழியாக வந்த அந்த இரு வாகனங்களும் கோயில்குளம் சந்தியில் வந்து திரும்பின. ஒரு வாகனம் உமாமகேஸ்வரன் வீதியால் சென்றது. மாணிக்கதாசன் பயணம் செய்த வாகனம் வேறு ஒரு பாதையால் சென்றதால் தப்பியது. உமாமகேஸ்வரன் வீதியால் சென்ற வாகனமே கிளைமோரில் சிக்கியது என வவுனியாச் செய்திகள் தெரிவித்தன. (உ–164)

## புலிகள் மீது சந்தேகம்

கொழும்பு, மே 13

வவுனியா கோயில் குளம் பகுதியில் நேற்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் நிலவுகிறது என்று பி.பி.ஸியின் சிங்கள சேவையில் வவுனியாவைச்சேர்ந்த சிங்களப் பத்திரிகையாளர் ஜினசேன ரத்துகமகே தெரிவித்தார்.

வவுனியா நகர் எல்லைக்குள் இவ்வாறு குண்டு வெடிக்க வைக்கும் ஆற்றல் புலிகளுக்கு உண்டா என அவரிடம் கேட்டதற்கு. புலிகளுக்கு ஆற்றல் உள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது என்று பதில் அளித்தார்.

## வடக்குக்கு 50 பஸ்கள் இந்தியாவிலிருந்து!

இந்தியாவில் இருந்து ஐம்பது பஸ்கள் இறக்குமதி செய்யப்பட்டு யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படவிருப்பதாகப் போக்குவரத் அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தலுக்காக யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்ட பஸ்களில் ஒரு தொகுதி பஸ்கள் வட பிராந்தியப் போக்குவரத்துச் சபைக்கு வழங்கப்பட்டிருந்தன.

அந்த பஸ்கள் கொழும்புக்கு மீண்டும் எடுத்து வரப்படவிருக்கின்றன என்றும் —

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் 50 பஸ்கள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படும் என்றும் —

அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (உ-10-3)

## வெபர் அரங்கு மீது புலிகள் ஷெல் வீச்சு!

மட்டக்களப்பு, மே 13

மட்டக்களப்பு நகரின் அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள வெபர் விளையாட்டரங்கை நோக்கி மட்டக்களப்பு வாவிக்கு அப்பால் கன்னங்குடாப் பகுதியிலிருந்து விடுதலைப் புலிகள் நேற்று மாலை 5.30 மணியளவில் திடீரென ஷெல்தாக்குதல்கள் நடத்தினர்.

இத்தாக்குதலில் மைதானத்தில் நின்றமூன்றுஇராணுவத்தினர் காயமடைந்தனர்.

'வெசாக்' கொண்டாட்டங்களை ஒட்டி வெபர் விளையாட்டு மைதானத்தில் பந்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### அ'புர வெசாக் நிகழ்வில்

## கான்ஸ்டபிள் மீது ஊர்காவலர் சூடு!

வவுனியா, மே 13

அநுராதபுரத்தில் ஜயந்த வனராமய விகாரையில் வெசாக் நிகழ்வுகளுக்கு பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்த பொலீஸ் கான்ஸ்டபிளை ஊர்காவலர் ஒருவர் சுட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொலீஸ் கான்ஸ்டபிளுக்கும், ஊர்காவலருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டதாகவும் —

வாய்த்தர்க்கம் உச்சகட்டம் அடையவே ஊர்காவலர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# 'வெற்றி உறுதி' நடவடிக்கை இன்றுடன் ஓராண்டுபூர்த்தி

வவுனியா, மே 13

வவுனியாவுக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் பாதுகாப்பான தரைவழிப் பாதை ஒன்றைத் திறக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட "வெற்றி உறுதி" இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு இன்றுடன் ஓராண்டு பூர்த்தியாகுகின்றது.

இந்த நடவடிக்கையை பூர்த்தி செய்வதற்கு அரச

(10ஆம் பக்கம் பார்க்க)

## மந்துவிலில் மோதல்

யாழ்ப்பாணம், மே 13

மந்துவில் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்கும் இடையில்நேற்று நண்பகல் 12.00 மணியளவில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் உயிரிழந்ததாகக் கூறப்படும் இளைஞன் ஒருவரின் சடலம் இனம் காணும் பொருட்டு கொடிகாமம் பொலீஸாரினால் நேற்றுப் பிற்பகல் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. (உ–139-51)

## மிதிவெடியில் சிப்பாய் காயம்

வவுனியா, மே 13

செட்டிகுளம் பகுதியில் படையினர் புதைத்த மிதிவெடியில் சிக்கி இராணுவச் சிப்பாய் ஒருவர் காயம் அடைந்தார்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது. (உ–164-3)

## இந்திய தூதரக அதிகாரி இன்று யாழ். வருகை

யாழ்ப்பாணம், மே 13

யாழ். மாவட்ட நிலை குறித்து ஆராய கொழும்பில் உள்ள இந்தியத்தூதரக அரசியல்துறை கவுன்ஸிலர் சச்சதேவ் ராஜேஜ்குமார் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்.

இன்று காலை பலாலியில் இராணுவ அதிகாரிகளுடன் பேச்சு நடத்திய பின்னர் மாலை யாழ். செயலகத்தில் திணைக்களத் தலைவர் கூட்டத்தில் அவர் பங்குபற்றுவார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச சபைத் தலைவர்கள் ஆகியோரை அவர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### தப்பி ஓடிய படையினரை

## காட்டிக்கொடுத்தால் சன்மானம் என அறிவிப்பு

கொழும்பு. மே 13

இராணுவத்தை விட்டுத் தப்பி ஓடியவர்களைக் கைது செய்வதற்கு உதவக் கூடிய தகவல்களைத் தெரிவிப்பவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும் என பொலீஸ்திணைக்களம் அறிவித்துள்ளது.

வழங்கப்படும் தகவல்கள் மிகவும் இரகசியமாக வைக்கப்படும் என்று சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தப்பிச் சென்ற இராணுவத்தினர் பற்றிய விவரத்தை எந்த ஒரு பொலீஸ் அதிகாரியிடமும் நேரடியாகவோ தொலைபேசி மூலமோ தெரிவிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தப்பிச் சென்ற இராணுவத்தினரை பாதுகாத்து வைத்திருத்தல், அவர்களுக்கு தொழில் வழங்குதல் போன்றவை குற்றங்

(10ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

ஏழாலை தெற்கு, மயிலங்காடு

## அறுமன் ஞானவைரவர்

ஆலய புனரமைப்பு நிதிக்காக நடத்தப்பட்ட

## அதிர்ஷ்ட இலாபச்சீட்டிழுப்பு முடிவுகள்

11-05-98 அன்று நடத்தப்பட்ட சீட்டிழுப்பின் முடிவுகள் வருமாறு

| | |
|---|---|
| 1ஆம் பரிசு | 1919 |
| 2ஆம் பரிசு | 4032 |
| 3ஆம் பரிசு | 1679 |

ஆறுதல் பரிசில்கள்

| | | |
|---|---|---|
| 1925 | 4631 | 4138 |
| 4870 | 324 | 2467 |
| 4874 | 2241 | 2775 |
| 3315 | | |

அதிர்ஷ்ட சாலிகள் பற்றுச்சீட்டுடன் வந்து பரிசில்களைப் பெற்றுக்கொள்ளவும்.

= ஆலய நிர்வாகிகள்

(சி/3733)

## கண்ணீர் அஞ்சலி



### பாஸ்கரமூர்த்தி முரளீதரன்

அவர்களுக்கு எங்களது கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பிப்பதோடு அவரது மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(55970) - நண்பர்கள்

## மரண அறிவித்தல்கள்

### பாஸ்கரமூர்த்தி முரளீதரன்

கன்னாதிட்டியை வசிப்பிடமாகக் கொண்ட பாஸ்கரமூர்த்தி முரளீதரன் 11-05-98 அன்று காலமானார்.

இவர் காலஞ் சென்றவர்களான திரு. திருமதி பாஸ்கரமூர்த்தி அவர்களின் அன்பு மகனும், மதிவதனி, சந்திரவதனி, பரமேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், குமார், சிவா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(13-05-98) புதன்கிழமை கஸ்தூரியார் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்துக்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
நண்பர்கள்.

கஸ்தூரியார் வீதி,
(உதயன் அருகில்),
யாழ்ப்பாணம்.

(55971)

திருமதி

### சின்னம்மா கந்தசாமி

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சின்னம்மா கந்தசாமி 12 — 05 — 1998 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும், கிருஸ்ணலிங்கம் (சிமெந்து கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை), கிருஸ்ணவேணி, கமலவேணி, புஸ்பராணி, இந்திராணி, மகாலட்சுமி, செல்வரத்னம் (ஆசிரியர், யூனியன் கல்லூரி), சரஸ்வதி அம்மா, உலகநாதன் (இ. போ. ச. கோண்டாவில்), வயிரவநாதன் (இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சி. மகேஸ்வரி காலஞ்சென்றவர்களான வி. செல்லையா, எஸ். கந்தையா மற்றும் தவத்துரை (ரஞ்சனா ஸ்ரோர்ஸ்), மகேந்திரன் (நகர சபை, சுன்னாகம்), செ. விஜயா, இ. தினகரன் (இலங்கை மின்சார சபை), இந்திராதேவி, ஜெயமனோகரி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று பி. ப. 1. 00 மணியளவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
க. கிருஸ்ணலிங்கம்
(மகன்)

மயிலணி,
சுன்னாகம்.

(55972)

## சமய நிகழ்வுகளில்

கொழும்புத்துறை, மே 13

உடுப்பிட்டி சந்திவல்லை வாளி அருள் மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 7 ஆம் திகதி ஆரம்பமாகியது.

11 தினங்கள் விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாடுகளுடன் உற்சவம் நடைபெறுகிறது.

எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை விசேட அபிஷேகமும், பூசையும் இடம்பெறும். (இ-30)

★ ★ ★

கோண்டாவில் நெட்டிலைப்பாய் அருள்மிகு ஸ்ரீ பிள்ளையார்கோயிலில்இன்று புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு பூங்காவனதிருவிழா விசேட அபிஷேகம், பூசை, ஆராதனையுடன் நடைபெறும்.

## இலவச விரிவுரை கருத்தரங்கு

யாழ். மத்திய கல்லூரி வர்த்தக மாணவர் மன்றம் மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடத்தி வரும் இலவச விரிவுரை கருத்தரங்குத் தொடரில் இன்று புதன் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் க. ரதிதரன் ''நவீன அரங்கின் தன்மை'' என்ற தலைப்பில் விரிவுரையாற்றுவார்.

இதேவேளை நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் இ. இரட்ணம் ''நிதிச் சந்தை'' என்ற தலைப்பில் விரிவுரையாற்றுவார்.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் எஸ். சிவலிங்கராஜா ''ஈழத்து இலக்கிய வரலாறு 20 ஆம் 21 ஆம் நூற்றாண்டு விளக்கம்'' என்பது பற்றி விரிவுரையாற்றுவார். (இ-4)


நாகம்ஸ்
சினிமா
சுன்னாகம்
அகல வெண் திரையில்
13- 05- 98 புதன்
சரத்குமார், வினிதா
நடித்த
பேண்டு மாஸ்ரர்
(பழைய நேரம்)
காட்சி 10- 30 — 2-30
(55968)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
இன்று முதல்
முரளி (இருவேடத்தில்)
ரேவதி, சங்கீதா,
வடிவேலு, மகேஸ்வரி
நடித்த
ரத்னா
புதிய வெளியீடு
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
தொலை பேசி இல:
070 - 212223
(55969)

சிவா
திரையில்
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(சிவன் கோயிலடி)
தினசரி 10-30 — 2-30
முரளி, ரேவதி
நடித்த
ரத்னா
(55973)


## குடற்புழு நோயால் சிறுவர்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 13

யாழ். மாநகர சபை எல்லைப் பகுதியிலுள்ள பாலர் பாடசாலைகளில் கல்வி பயிலும்சிறுவர்கள்பலர்குடற்புழு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்,

இது தொடர்பாக யாழ். மாநகர சபை சுகாதாரப் பகுதியினர் பாலர் பாடசாலைகள் பலவற்றில் நடத்திய மருத்துவ பரிசோதனையில் அங்குள்ள சிறுவர்கள் பலர் இந்நோயினால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

இந்நோயின் தாக்கத்தினைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் சுகாதாரப் பகுதியினரால்சிறுவர்களுக்கு குடற்புழு நோய் தடை மருந்து வழங்கப்பட்டதுடன் அவர்களின் பெற்றோர்களுக்கு சுகாதார அறிவுரைகளும் வழங்கப்பட்டன.

யாழ். மாநகர எல்லைக்குள் 51 பாலர் பாடசாலைகளில் ஆயிரத்து 443 சிறுவர்கள் கல்வி பயின்று வருவது குறிப்பிடத்தக்கது. (இ-5)

உ

அளவெட்டி

## கும்பழாவளைப் பிள்ளையார் கோயில்

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

1. கொடியேற்றம்:
   **31-05-1998** ஞாயிற்றுக்கிழமை
   முற்பகல் 11-00 மணி (பழைய நேரம்)
2. மஹோற்சவகாலக் கடைகளுக்கான விண்ணப்பங்கள்:
   - i. தேநீர்க் கடைகள்
   - ii. ஐஸ்கிறீம் கடைகள்
   - iii. கச்சான் கடைகள்
   - iv. மணிக் கடைகள்
   - v. இனிப்புக் கடைகள்
   - vi. பரத்தல் கடைகள்

   மேற்படி கடைகளுக்கான விண்ணப்பங்கள் 25-05-1998 இற்கு முன்னர் ஏற்றுக்கொள்ளப்படும்.
3. ஏலவிற்பனை:
   ஆலயம் முன்பாகவுள்ள விறகு 17 - 05 - 1998 ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு ஏலவிற்பனைக்கு விட உள்ளதால் விரும்புபவர்கள் பங்குபற்றவும்.
4. தொண்டர்சபை ஒன்றுகூடல்:
   இடம்பெயர்ந்துள்ள சகல தொண்டர்களும், ஏனையோரும் 16-05-1998 பிற்பகல் 2-00 மணிக்கு ஆலய மண்டபத்திற்குச் சமுகம் தருமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

செ. நம்பியாரூரன்
தலைவர்

தி. திருச்செந்தூரன்
செயலாளர்

ஆலய தொண்டர்சபை

(55975)

## கண்ணீர் அஞ்சலி

கலைப்பீட 3 ஆம் வருட வர்த்தகப் பிரிவு மாணவன்

தே. யூறிசனின் அன்புத்தாயார்

திருமதி

### மரியலீலா தேவதாஸ்

12-05-1998 இல் காலமானார். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் எமது நண்பனின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

3 ஆம் வருட கலைப்பீட மாணவர்கள்,
யாழ். பல்கலைக்கழகம்.

(55965)

## கண்ணீர் அஞ்சலி

எமது 2 ஆம் வருட கிறிஸ்த்தவ நாகரிகத்துறை மாணவி

தே. ஆன்ஜெகலதா அவர்களின் தாயார்

திருமதி

### மரியலீலா தேவதாஸ்

அவர்கள் 12-5-98 நேற்று மரணமடைந்ததை இட்டு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

2 ஆம் வருட B பிரிவு மாணவர்கள்,
கலைப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(55974)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த

### மு. முரளீதரன்

நேற்று முன்தினம் காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கஜீபன் ஜுவல்லறி
கே. கே. எஸ். வீதி,
கோண்டாவில்.

(55966)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணு வெடிப்பு சோதனைக்கு வெளிநாடுகள் பல கண்டனம்!

## ஆஸி., நியூஸிலாந்து தூதர்களை திருப்பி அழைத்தன

புதுடில்லி, மே 13

இந்தியாவினால் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட அணு வெடிப்புப் பரிசோதனையை உலக நாடுகள் பல கண்டித்துள்ளன.

ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள ஹொக்ரான் பகுதியில் இந்த அணு வெடிப்பும் பரிசோதனைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது தெரிந்ததே.

இந்த அணு வெடிப்புப் பரிசோதனை குறித்து வெளிநாடுகளிலிருந்து வன்மையான கருத்துக்களும், விமர்சனங்களும் வெளியாகியிருக்கின்றன.

இதனை ஆஸ்திரேலியாவும், நியூசிலாந்தும் வன்மையமகக் கண்டித்துள்ளன.

மேற் கொண்டும் ஆலோசனை நடத்துவதற்காக புதுடில்லியிலுள்ள தமது தூதர்களை அந்த நாடுகள் திருப்பி அழைத்துக் கொண் ள்ளன.

இந்த பரிசோதனைகள் குறித்து பிரான்ஸூம் கவலை தெரிவித்துள்ளது.

பிராந்தியத்தில் நிதானத்தைக் கடைப்பிடித்திடுமாறு பிரான்ஸ் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

இந்தியாவுக்கு மிகப் பெருமளவு உதவி வழங்கும் நாடான ஜப்பான் இந்தியாவுக்கான தன்னுடைய கடனுதவியை மறுபரீசிலனை செய்வது பற்றி சிந்தித்து வருகிறது.

விரிவான அணுஆயுதசோதனைத் தடை ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடுமேயானால் இந்தியாவுக்கு எதிராக விதிக்கவிருக்கும் கட்டாயத்தடை நடவடிக்கைகளை நீக்கி விடுமாறு அதிபர் பில்கிளின்ரன் அமெரிக்க நாடாளுமன்றத்திடம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள இயலும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

விரிவான பரிசோதனைத் தடை ஒப்பந்தத்திலும் அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்திலும் கையெழுத்திடுமாறு கனடா இந்தியாவிடம் கூறியுள்ளது. இந்த வார இறுதியில் லண்டனில் நடைபெற இருக்கும் அபிவிருத்தி அடைந்த நாடுகளைக் கொண்ட ''ஜீ-8'' நாடுகளின் உச்சிமாநாட்டில் இந்தப் பிரச்சினை விவாதிக்கப்படலாம் என கனேடிய வெளியுறவு அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் ரொரண்டோவில் தெரிவித்தார்.

சார்க் பிராந்தியத்தில் நடக்கும் எந்தவொரு அணு ஆயுதப் போட்டியையும் தமது நாடு எதிர்ப்பதாக பங்களாதேஷின் வெளியுறவுத்துறை இணை அமைச்சரான அப்துல்ஹசன்சௌத்திரி தெரிவித்துள்ளார்.

விரிவான அணு ஆயுதசோதனை தடை ஒப்பந்தத்தில் பங்களாதேஷ் ஒப்பமிட்டுள்ளது என்றும் —

அமைதி மற்றும் வளர்ச்சி நோக்கிய திசையிலே உழைப்பதான கொள்கையைத்தான் பங்களாதேஷ் கடைப்பிடித்து வருகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-8)

## ஜேர்மனியிடம் ஈரான் ஆட்சேபம்

ஜேர்மனியில் கொலோன் என்ற இடத்திலிருந்த ஈரானிய நிலையம் ஒன்று கடந்த வியாழக்கிழமை தாக்கப்பட்டதற்கு ஈரானிய அரசு எதிர்ப்புத் தெரிவித் துள்ளது

ஜேர்மன் நாட்டுப் பொலீஸார் அந்த நிலையத்தின் பாதுகாப்பை உறுதிசெய்யத் தவறிவிட்டார்கள் என்றும் —

அங்கு நடந்த மத வைபவத்தை ஈரானின் எதிர்க்கட்சிக் குழு இடையூறு செய்ய ஜேர்மன் பொலீஸார் அனுமதித்து விட்டார்கள் என்றும் ஈரானிய வெளியுறவுத்துறை அதிகாரிகள் குற்றஞ்சாட்டி உள்ளனர்.

ஜேர்மனியும் ஈரானும் தமக்கிடையிலான உறவுகளை மேம்படுத்தப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கி இருக்கும் சமயத்தில் இந்த பிரச்சினை உருவாகி இருக்கிறது. (இ-6)

## இந்திய விஞ்ஞானிகளுக்கு ஜெயலலிதா பாராட்டு

புதுடில்லி, மே 13

அணுசக்தி தொழில் பற்றிய அறிவில் இந்திய விஞ்ஞானிகள் உலகில் எவருக்கும் சளைத்தவர்கள் அல்லர் என்பதைமீண்டும் நீரூபித்திருக்கிறர். இது உண்மையிலேயே நம் நாட்டுக்குப் பெருமையானதாகும். இந்த வரலாற்று சாதனைக்காக பிரதமரையும், இந்திய அரசையும் நான் பாராட்டுகிறேன்.

இவ்வாறு நிலத்தடி அணு வெடிப்பு பரிசோதனை குறித்து செல்வி ஜெயலலிதா மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

(இ-8)

## கடற் கொள்ளையர் கப்பலைத் தாக்கினர்!

புதுடில்லி, மே 13

இந்து சமுத்திரத்தில் பிரயாணம் செய்து கொண்டிருந்த வித்துவேனிய சரக்குக் கப்பல் ஒன்று கடற் கொள்ளைக்காரர்களால் தாக்கப்பட்டுள்ளது. கப்பலில் இருந்த ஓர் உத்தியோகத்தர் கடுமையான காயங்களுக்கு உள்ளானார்.

''அல்திர்டாஸ்'' என்ற இந்தக் கப்பல் கல்கத்தாவிலிருந்து சிங்கப்பூருக்கு சென்று கொண்டிருந்தது.

தாய்லாந்து தீவு ஒன்றுக்கு 26 கிலோ மீற்றர் தொலைவில் சிறிய படகுகொன்றில் வந்த 25 கடற் கொள்ளைக்காரர்களினால் இது வழிமறிக்கப்பட்டது.

படகில் இருந்து 10 ஆயுதபாணிகள் கப்பலுக்குள் சென்று சிப்பந்திகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். இதில் ஓர் உத்தியோகத்தர் காயமடைந்தார்.

ஏனையோரை கப்பலில் இருந்த கம்பியுடன் கட்டி வைத்துவிட்டு வானொலித் தொடர்புகளைத் துண்டித்த பின்னர் கொள்ளைக்காரர்கள் பொருள்களைச் சூறையாடினர்.

அவர்கள் கப்பலை விட்டுச்சென்ற பின்னர் சிப்பந்திகளில் ஒருவர் கட்டுக்களில் இருந்து தன்னை விடுவித்துக்கொண்டு கைத்தொலைபேசி மூலம் செய்தி அனுப்பினார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-8)

## பெனாஸிரை கைது செய்ய நீதிமன்று பிடி விறாந்து

லண்டன், மே 13

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமரும், எதிர்க்கட்சித் தலைவியுமான பெனாஸிர் பூட்டோவை கைது செய்யும் பிடி விறாந்து ஒன்றை பிறப்பிப்பது என்று பாகிஸ்தானின் உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

வெளிநாடு சென்றுள்ள பெனாஸிர் பூட்டோ இவ் வாரம் வீடு திரும்புவார் என்றும் —

வீடு திரும்பியவுடன் அவர் கைது செய்யப்படுவார் என்றும் — அவரது வழக்கறிஞர்கள் நம்புகிறார்கள்.

தனது ஆட்சிக் காலத்தில் பாகிஸ்தான் இன்ரர் நஷனல் எயர் நிறுவனத்தில் இவர் ஆயிரத்து 300 பேருக்கு வேலை வாங்கிக் கொடுத்தார் என்றும் —

இது சம்பந்தமான வழக்கில் நேரில் சமூகத்தர இவர் மறுத்த படியால் இந்த பிடி விறாந்து பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இந்த நியமனங்கள் சட்ட விரோதமானவை என்று அரசாங்க வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.

இந்த நியமனங்களைச் செய்ய தனக்கு அதிகாரம் இருந்தது என்றும் — இந்தக் குற்றச்சாட்டுகள் அரசியல் அடிப்படையானவை என்றும் — பெனாஸிர் பூட்டோ தெரிவித்துள்ளார். (இ-8)

உலக அரங்கில்

## இனவாத குற்றச்சாட்டு

கேப்டவுன், மே 13

தென்னாபிரிக்காவில் ரக்பி விளையாட்டுத் துறையில் இனவாதமும் நிர்வாகச் சீர்கேடுகளும் இருந்தன என்ற சர்ச்சையின் மத்தியில் அந்த விளையாட்டுத்துறைத் தலைவர் ராஜினாமாச் செய்கிறார்.

முன்னர் பதவி விலக மறுத்து வந்த அவர் தனது நண்பர்கள் தனக்கு ஆதரவு அளிக்கத் தவறிவிட்டார்கள் என்று குற்றஞ்சாட்டி உள்ளார்.

தென்னாபிரிக்காவின் தேசிய விளையாட்டு மன்றம் ரக்பி கூட்டமைப்பையும் தேசியத் தரப்புடனான எல்லாப் போட்டிகளையும் ரத்துச் செய்ததைத்தொடர்ந்து இவரது இந்த அறிவித்தல் வெளிவந்துள்ளது. (இ-6)

## பங்களாதேஷ் கவலை

டாக்கா, மே 13

''தெற்காசியாவில் ஆயுதப் போட்டியில் ஈடுபடுவது பங்களாதேஷின் நலனுக்கு நல்லதல்ல.''

இப்படி பங்களாதேஷின் வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவையும், பாகிஸ்தானையும் போல் அல்லாது பங்களாதேஷ் அணு ஆயுத பரவல் தடுப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருப்பதாகவும், பங்களாதேஷின் நிலையை இது விளக்குகிறது எனவும் வெளியுறவு அமைச்சர் அபுல்கசான் சௌத்தி கூறியுள்ளார்.

## $2\frac{1}{2}$ லட்சம் அகதிகளை ஜேர்மனி நாடு கடத்தும்

பொன், மே 13

ஜேர்மனியிலிருந்து நாடுகடத்தப் படஇருக்கும் வெளிநாட்டு அகதிகளின் எண்ணிக்கை இரண்டரை லட்சம்வரை இருக்கலாம் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

நுழைவு அனுமதி, அடைக்கல விண்ணப்பம் ஆகியன நிராகரிக்கப்பட்ட பின்னர் ஜேர்மனியால் திருப்பி அனுப்பப்பட இருக்கும் அகதிகளை தாய் நாடுகள் ஏற்றுக் கொள்ள மறுப்புத் தெரிவித்தால் அந்த நாடுகளின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்—

அந்த நாடுகளுக்கு வழங்கப்படும் அபிவிருத்தி நிதியை துண்டித்து விடுவது பற்றி தாம் ஆராய்ந்து வருவதாகவும் — ஜேர்மன் வெளியுறவு அமைச்சு அறிவித்திருக்கிறது.

நைஜீரியா, சூடான், இந்தியா, பங்களாதேஷ் உட்பட சுமார் 18 நாடுகள் வரை இதனால் பாதிக்கப்படலாம் என்று ஜேர்மன் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. (இ-8)

# இந்திய அமைச்சரவையை விரிவுபடுத்துவதற்கு முடிவு

புதுடில்லி, மே 13

வாஜ்பாய் தலைமையிலான பாரதீய ஜனதா கூட்டணி அமைச்சரவை ஒரு வாரத்தில் விரிவுபடுத்தப் படும்.

கூட்டணியில் இடம் பெற்றுள்ள அனைத்து கட்சிகளும் ஒப்புக்கொண்டால் நாடாளுமன்ற பட்ஜட் கூட்டத்தொடருக்கு முன் புதிய அமைச்சர்கள் பதவி ஏற்பார்கள் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

கூட்டணிக் கட்சிகளுக்கு இடையில் பல்வேறு பிரச்சினைகளில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன.

நாடாளுமன்ற பட்ஜட் கூட்டத் தொடர் தொடங்க இரு வாரங்களே உள்ளன. இந் நிலையில் கூட்டணிக் கட்சிகளின் ஒருங்கிணைப்புக் குழு டில்லியில் சனிக்கிழமை முதன் முறையாகக் கூடுகிறது.

தேசிய செயல் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து இக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்று அதிகாரப்பூர்வமாகக் கூறப்பட்டுள்ளது.

சர்ச்சைக்கிடமான விஷயங்கள் குறித்து இக் கூட்டத்தில் [illegible] டாது.

ஜெயலலிதா, மமதா பானர்ஜி ஆகியோர் தனித்தனியே பிரதமரைச் சந்தித்துப் பேசுவார்கள் என்றும் தெரிகிறது.

பல்வேறு அமைச்சர்களில் இணை அமைச்சர்களோ, துணை அமைச்சர்களோ தற்போது இல்லை.

குறிப்பாக உள்துறை, வேளாண்மை போன்ற முக்கியத்துவம் வாய்ந்த துறைகளுக்கு அமைச்சர்கள் மட்டுமே உள்ளனர். இத்துறைகள் தொடர்பான கேள்விகள் மக்களவை, மாநிலங்களவை இரண்டிலும் வரும் போது ஒரே அமைச்சர் இரு அவைகளிலும் பதில் அளிக்க முடியாத நிலை ஏற்படுகிறது.

எனவே பட்ஜட் கூட்டத் தொடர் தொடங்குவதற்கு ஒரு வாரத்துக்கு முன்னதாகவே அமைச்சரவையை விரிவாக்க வேண்டும் என்று பாரதீய ஜனதாக்கட்சியில் உள்ள ஒரு பிரிவினர் பிரதமரிடம் வலியுறுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

அமைச்சரவையை விரிவுபடுத்துவது என்று முடிவு எடுக்கப்பட்டால், கூடுதலாக 15 முதல் 20 பேர் சேர்த்துக் கொள்ளப்படலாம் என்றும் 20 ஆம் திகதிக்குள் அவர்கள் பதவியேற்கக் கூடும் என்றும் பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போதைய அமைச்சரவையில் பிரதமர் உட்பட 20 அமைச்சர்களும் 21இணை அமைச்சர்களும் உள்ளனர். அமைச்சர்களாக இருந்த சேடப்பட்டி முத்தையா, பூட்டாசிங் ஆகியோர் சமீபத்தில் ராஜினாமா செய்துள்ளனர்.

அமைச்சரவை விஸ்தரிக்கப்படும் போது பாட்டாளி மக்கள் கட்சிக்கும் பதவி வழங்கப்படலாம் — என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(இ-10)

## அஸாமில் தாக்குதல்

புதுடில்லி, மே 13

அஸாமில் சன்தார் இனத் தொண்டர்கள் தங்கியுள்ள உதவி முகாமொன்றை போடோ தீவிரவாதிகள் என்று சந்தேகிக்கப்படும். சிலர் தாக்கியதில் குறைந்தது ஒருவர் கொல்லப்பட்டார் மூவர் காயமடைந்தனர்.

நவீன ஆயுதங்களை ஓர்திய தீவிரவாதிகளின் கும்பலொன்று இத்தாக்குதலை நடத்தியது.

தீவிரவாதிகள் திடீரெனப் புகுந்து அந்த முகாமைத் தாக்கிச் சுடத்தொடங்கினர் என்று தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தப்பி ஓடியோர் திரும்பி வந்தால் 2 வாரங்களில் யுத்தத்துக்கு முடிவு!

## அனுருத்த தெரிவிப்பு

கொழும்பு, மே 13

இராணுவத்தை விட்டுத் தப்பி ஓடியவர்கள் அனைவரும் மீண்டும் போர் முனைக்கு திரும்பி வந்தால் இரு வாரங்களுக்குள் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர முடியும்.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை மாத்தறையில் கட்டடம் ஒன்றை திறந்து வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

"யுத்தத்தில் வெற்றிபெற பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம். பயிற்சி பெற்ற பின்னர் இராணுவத்தை விட்டுத் தப்பி ஓடிய அனைத்துப் படையினரையும் யுத்தத்துக்கு ஒன்று சேர்ப்பது கண்ணியமான பிரஜைகளின் பொறுப்பும் கடமையும் ஆகும்.

அவ்வாறு செய்யாவிடின் நாட்டின் ஒருமைப்பாட்டுக்காக 18 வயதுக்கும் 30வயதுக்கும் உட்பட்ட அனைத்துப் பிரஜைகளையும் யுத்த சேவையில் சேர்ப்பதுகுறித்து அரசு கட்டாயம் சிந்திக்க வேண்டிய நிலை உருவாகும்.

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் 13ஆண்டுகளாக பெயரளவில் நடைபெற்று வந்த யுத்தம் கடந்த4ஆண்டுகளாகவே உண்மை யுத்தமாக மாறியுள்ளது.

இராணுவத்தில் படையினரைச் சேர்த்து பயிற்சியளிக்க பல மாதங்களாகிறது. ஆனால் பயிற்சி பெற்ற பின்னர் இராணுவத்திலிருந்து தப்பி ஓடியபடையினர் அனைவரும் மீண்டும்இராணுவத்தில் இணைந்தால் இரண்டு அல்லது மூன்று வாரங்களில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரலாம் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

அவர்கள் மீண்டும் இராணுவத்தில் இணையாவிடின் அவர்கள் கைது செய்யப்படுவது மாத்திரமன்றி தண்டனை வழங்கப்பட்டு யுத்தத்துக்கு அனுப்பிவைக்கப் படுவர்.

அவ்வாறான படையினரைப் பாதுகாக்க எந்த ஒரு அமைச்சருக்கோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினருக்கோ நான் சந்தர்ப்பம் வழங்கமாட்டேன்.

இவ்வாறு அவர் கூறினார். (இ-10)

## விவசாய பயிற்சி நெறி விண்ணப்பம்

திருநெல்வேலியிலுள்ள மாவட்ட விவசாயப் பயிற்சிப் பாடசாலை குறுகிய கால விவசாயப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்ள விரும்பும் இளைஞர்கள், யுவதிகள் தமது விண்ணப்பங்களை உதவி விவசாயப் பணிப்பாளர் (பயிற்சி) மாவட்ட விவசாயப் பயிற்சிப் பாடசாலை திருநெல்வேலி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளனர். (இ-7)

## வவுனியா இரவு ரயிலில் மேலதிக பெட்டிகள்

கொழும்பு, மே 13

வவுனியாவுக்கும் கொழும்பு கோட்டைக்குமிடையே சேவையில் ஈடுபடும் இரவு தபால் ரயிலில் மேலதிக ரயில் பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளன.

கடந்த 21 ஆம்திகதி முதல் மேலதிக ரயில் பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளதாகவும் —

தற்போது ரயில் பயணிகள் உறங்கல் இருக்கை ஆசனங்களை சிரமம் இன்றிப் பெற்றுப் பிரயாணம் செய்யக் கூடியதாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

முன்னர் பொலனறுவைக்கான ரயில் பெட்டிகளும் இதே ரயிலில் இணைக்கப்பட்டு மாகோ வரையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதால் வவுனியா பிரயாணிகளுக்கான போதிய உறங்கல் இருக்கைப் பெட்டிகளை இணைக்கமுடியாமல் இருந்தது.

பயணிகள் அனுபவிக்கும் கஷ்டங்களை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் த. சித்தார்த்தன், வை. பாலச்சந்திரன், எஸ். சண்முகநாதன் மற்றும் ரயில் நிலைய அதிபர் என். நவரட்ணராஜா ஆகியோர் சுட்டிக் காட்டியதை அடுத்து போக்குவரத்து அமைச்சர் ஏ.எச்.எம் பௌஸி வவுனியாவுக்கு விஜயம் செய்திருந்த போது அளித்த உத்தரவாதத்தின்படி இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (இ-8-10)

## சாவகச்சேரி பிரதேச சபை கூட்டம்

தென்மராட்சி, மே 13

சாவகச்சேரி பிரதேச சபையின் கூட்டம் கடந்த புதன்கிழமை நடைபெற்றபோது இப்பிரதேசசபைக்கு தெரிவு செய்யப்பட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் தவிர்ந்த ஏனையோர் கூட்டத்தில் கலந்து கொண்டதாக பிரதேச சபைத் தலைவர் பொ. அன்ரன் தெரிவித்தார். (இ-117)

## சிறுதானிய செய்கை

அரியாலை, மே 13

யாழ்ப்பாணத்தில் தற்போது பெய்த மழையினால் சிறுதானிய பயிர்ச்செய்கையாளர்கள் நன்மை அடைந்துள்ளனர்.

வயல் நிலங்களில் பயிரிடப்பட்ட கௌபி, பயறு, உழுந்து, எள்ளு போன்ற உணவுப்பயிர்கள் மழையின்றி பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-17)

## மண்வெட்டி விநியோகம் குறித்து அறிவுறுத்தல்

உலக உணவு விவசாய நிறுவனத்தால் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தற்போது இலவசமாக வழங்கப்பட்டு வரும் மண்வெட்டி விநியோகம் குறித்து மாவட்ட விவசாய விரிவாக்க அலுவலக வட்டாரங்கள் அறிவுறுத்தல் ஒன்றை வெளியிட்டுள்ளன.

முழுநேரம் விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளுக்கும். கடந்த கால வன்செயல்களின்போது பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும் முன்னுரிமை அடிப்படையில் மண்வெட்டிகள் விநியோகம்செய்யப்படுமெனவும்—

ஏற்கனவே இலவசமாக மண்வெட்டிகள் பெற்றோருக்கு தற்போதைய விநியோகத்தில் இடம் அளிக்கப்பட மாட்டாதெனவும் விவசாய விரிவாக்க அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன (இ-7)

## சீனி,ம.எண்ணெய் தாராளம்

உரும்பிராய், மே 13

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் சீனி, மண்ணெண்ணெய் ஆகியவை தாராளமாக விநியோகிக்கப்படுகின்றன.

பாவனையாளர்கள் வேண்டியளவு பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-154)

## ப. நோ. கூ. சங்கங்கள் விவசாய நடவடிக்கையிலும்

யாழ்ப்பாணம் மே. 13

நாட்டில் உள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் அத்தியாவசியப்பொருட்களை விநியோகிப்பதுடன் மட்டும் சங்கங்களை நடத்தலாம் என்ற நிலைப்பாட்டை விடுத்து விவசாய நடவடிக்கையிலும் ஈடுபட வேண்டும்.

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஹெட்டியாராச்சி சகல மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு பலநோக்கு கூட்டுறவு சங்கமும் தனது எல்லைப்பரப்பில் விவசாய அபிவிருத்தி பிரிவு ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விவசாய அபிவிருத்தி மூலம் சங்கங்கள் உணவுத் தன்னிறைவை பாதுகாக்க முடியும்.

அத்துடன் கூட்டுறவு இயக்கம் தற்போது நடைமுறைபடுத்திக் கொண்டிருக்கும் முன்னூறு பலநோக்கு கூட்டுறவு சங்கங்களில் அதிகமானவைவிவசாய பிரதேசங்ளிலேயே நிறுவப்பட்டுள்ளன.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-17)

## குமுதினி படுகொலை நினைவு தினம்

நெடுந்தீவு மே. 13

குமுதினி படகு படுகொலையின் 13 ஆவது ஆண்டு நிறைவுதினம் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்படும்.

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவானுக்குச் சென்ற பயணிகள் நடுக்கடலில்வைத்துப்படுகொலை செய்யப்பட்டனர்.

31 பயணிகள் அப்பொழுது உயிரிழந்தனர். (இ-111)

## பாதுகாவலர் சங்கம் கோரிக்கை

சூரியப்பிரகாசம் இராணுவ நடவடிக்கையின் பின்னர் யாழ. குடாநாட்டில் கைது செய்யப்பட்டு இதுவரை தகவல் தெரியாதிருப்பவர்களின் விவரங்களை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். கிளை கைதானோர், காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கத்திடம் கேட்டுள்ளது.

மேற்படி விவரங்களைப் பதிவு செய்யும் பணி தற்போது நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் —

பெற்றோர்கள், பாதுகாவலர்கள் உடனடியாக தமது விவரங்களைச் சமர்ப்பிக்குமாறும்—கைதானோர், காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம் பெற்றோர், உறவினர்களைக் கேட்டுள்ளது. (இ-7)

## கப்பலில் தபால் பொதிகள்

யாழ்ப்பாணம் மே13

யாழ். மாவட்டத்துக்குரிய வெளியூர் தபால்கள் அடங்கிய ஒரு தொகுதி தபால் பொதிகள் இன்று புதன் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல்மூலம் யாழ். வந்து சேரும் என யாழ். பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இம் முறை கடந்த வாரங்களை விட அதிகளவு தபால் பொதிகள் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## மெய்வன்மை போட்டி

யாழ்ப்பாணம், மே 13

நல்லூர் ஞானோதயா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுனர் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் த. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும்.

இதில் வலயம் – 1 நல்லூர், யாழ்ப்பாணம் ஆகியவற்றின் உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். காங்கேயன் [illegible] கலந்து கொள்கிறார். (இ-4)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி சபிண்டிகரண அழைப்பும்



அமரர்

**முருகேசு மயில்வாகனம்**

(காராளி)

மலர்வு: 1933 - 03 - 21

உதிர்வு; 14 - 04 - 1998

இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத்தலைவரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும் இவ்வேளையில் அன்னாரின் பிரிவுச் செய்தி கேட்டு உடன் எமது இல்லத்துக்கு விரைந்து எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், இறுதிக்கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும், உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இருந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், மற்றும் பல்வேறு வகையில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்வதோடு 14 – 05 – 98 வியாழக்கிழமை (நாளை) காலை 6 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அந்தியேட்டி கிரியைகளிலும், சபிண்டீகரணக்கிரியைகளிலும்கலந்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

– குடும்பத்தினர்

கலைவாணி வீடியோ சென்ரர் (அருகில்)
துன்னாலை மேற்கு,
கரவெட்டி

(சி–3 732)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறையில் 20 சத வீதமான மக்களே மீளக்குடியேறியுள்ளனர்

## பொதுவசதிகள் இல்லை; கட்டடங்கள் சேதம்!

யாழ்ப்பாணம், மே 13

ஊர்காவற்றுறை பிரதேச எல்லைக்குள் வசித்தவர்களில் 80 சதவீதமானோர் இதுவரை மீளக்குடியேறவில்லை. 1996 ஏப்ரலில் இப்பகுதி மக்கள் மீளக்குடியேற ஆரம்பித்ததுமுதல் இதுவரைக்கும் 20 சத வீதமானோரே மீளக்குடியமர்ந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரதேசத்தில் இடம்பெற்ற இராணுவநடவடிக்கை காரணமாக பிரதேச சபைக்குச் சொந்தமான சொத்துக்கள், உடைமைகள் அழித்துக் சேதமாக்கப்பட்டதால் அலுவலக ஆவணங்களும் முற்றாக அழிக்கப்பட்டு விட்டன. இதனால் அலுவலகத்தின் வருமான அறவீடுகளை மேற்கொள்ள முடியாதுள்ளது. இப்பகுதியில் மீளக் குடியேறிய மக்களது பெரும்பாலான வீடுகள் அழிக்கப்பட்ட நிலையிலிருப்பதுகுறிப்பிடத்தக்கது.

சுமார் ஏழு வருடங்களாக மக்கள் இல்லாப்பிரதேசமாக இப்பகுதி இருந்தமையினாலும் இராணுவ நடவடிக்கை காரணமாகவீதியோரங்களில் அடர்ந்தகாடாகசெடி கொடி படர்ந்தும்வடிகால் அமைப்பு உடைந்தும் தூர்ந்தும் உள்ளன. அத்துடன் பொது மல சல கூட்டங்களும் உடைந்துள்ளன.

ஊர்காவற்றுறை பிரதேச சபை நிர்வாகத்தின் கீழ்வரும் வீதிகள் மற்றும் மதகுகள் போன்றவை பாவிக்க முடியாத நிலையில் உடைந்து குண்டும் குழியுமாக காணப்படுகின்றன.

இப்பகுதியில் இயங்கி வந்த காரைநகர், ஊர்காவற்றுறை குடிநீர் விநியோகத் திட்டங்கள் யாவும் தற்பொழுது சீரழிந்து விட்டன. குடிநீர் வழங்கி வந்த இரு பவுசர்களும், உழவு இயந்திரங்களும் காணாமற் போய் விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரதேச சபை நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வந்த பொதுச் சந்தைகள், குளிக்கும் பொதுக் கிணறுகள் சேதமாகியுள்ளன. இங்குள்ள சுடுகாடுகள், இடுகாடுகள் என்பன பற்றைகள் அடர்ந்து வளர்ந்துள்ளதோடு இராணுவ காவலரண்கள் அமைந்துள்ள காரணத்தினால் பயன்படுத்த முடியாத நிலையிலுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-5)

## குடாக்கடல் ஊடாக வருவோர் அதிகரிப்பு

அரியாலை, மே 13

வன்னிப்பகுதியில் இருந்த குடாக்கடல் வழியாக யாழ்ப்பாணம் வருவோரின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருகிறது.

நாளாந்தம் நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் படகுகள் மூலமாக குருநகர் இறங்குதுறையை வந்தடைகின்றனர். (இ-17)

## வாக்காளர் பதிவுச் சான்றிதழ் பெற ஆயிரத்துக்கு மேற்பட்டோர் விண்ணப்பம்

## இன்று முதல் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 13

நாளை 14 ஆம் திகதி முதல் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவிருக்கும் பட்டதாரி ஆசிரியர்களை தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவோருக்கான வாக்காளர் பதிவுச் சான்றிதழ்கள் இன்று புதன் காலை 9 மணி முதல் யாழ். செயலகத்தில் உள்ள தேர்தல் திணைக்கள பிராந்திய அலுவலகத்தில் வழங்கப்படவிருக்கின்றன.

வாக்காளர் பதிவுச்சான்றிதழ்கள் பெற விண்ணப்பித்தவர்களுக்கே சான்றிதழ்கள் விநியோகம் செய்யப்படும்.

வாக்காளர் பதிவுச்சான்றிதழ்கள் பெறுவதற்காக இதுவரை ஆயிரத்துக்கு மேற்பட்ட பட்டதாரிகள் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

தேர்தல் திணைக்கள உத்தியோகத்தர்கள் கடந்த சனி, ஞாயிறு முதலிய தினங்களிலும் வாக்காளர் பதிவுச் சான்றிதழ் தயாரிக்கும் பணியினை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## புனரமைப்பு

வடமராட்சி கிழக்கு நாகர் கோயில் பொதுச்சந்தை புனரமைக்கப்பட்டுள்ளது.

இச்சந்தையின் கிடுகுகள் பழுதடைந்தமையால் வியாபாரிகள் பொதுமக்கள் பெரும் பாதிப்படைந்து வந்தனர். (இ-36)

வவுனியா

## நலன்புரி நிலையங்களில் கட்டுப்பாடு தளர்வு

வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து வந்து வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களை நிரந்தரமாக வவுனியாவில் வசிக்கும் எவராவது பொறுப்பெடுத்து தம்முடன் தங்க வைக்கலாம் என வவுனியா அரசாங்க அதிபர் கே. கணேஷ் தெரிவித்தார்.

இதற்கான அனுமதியைப் பாதுகாப்பு அமைச்சு இம்மாதம் 6 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் வழங்கியுள்ளதாகவும் —

அதனையடுத்து இந்த நடைமுறை உடனடியாக செயற்படுத்தப்படுவதாகவும் — அவர் மேலும் கூறினார்.

வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கை காரணமாக வவுனியா மாவட்ட எல்லைக்கு உட்பட்ட வன்னிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களை விடுவிப்பது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளிடமும், ஜனாதிபதி செயலகத்துடனும், வவுனியாவிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவில் மற்றும் இராணுவ உயரதிகாரிகள் தொடர்பு கொண்டு வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

வவுனியாவில் நிரந்தரமாக வசிக்கின்ற, பொலிஸார் வழங்கியுள்ள நிரந்தர வதிவிட அனுமதி பெற்றுள்ள ஒருவர், வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து வந்துள்ள ஒருவரை அல்லது குடும்பத்தைப் பொறுப்பேற்பாராயின் அவர்கள் நலன்புரி நிலையத்தில் இருந்து விடுவிக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் உறவினர்கள் இருக்கின்ற போதிலும் இடம்பெயர்ந்தவர்கள் அவர்களுடன் சென்று தங்குவதற்குரிய அனுமதி இதுவரையிலும் வவுனியாவிலுள்ள பாதுகாப்பு அதிகாரிகளினால் வழங்கப்படவில்லை.

இதனால் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அடிப்படை வசதிகள் குறைந்த நிலையில் நலன்புரிநிலையங்களில் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றன. (இ-8-10)

## சந்தைகளில் கிழங்கு

சாவகச்சேரி, மே 13

சாவகச்சேரி தனியார் வர்த்தக நிலையங்களிலும், பொதுச் சந்தையிலும் உருளைக்கிழங்கு விற்பனைக்கு வந்துள்ளது.

கிலோ 60ரூபாவாக கிழங்கு விற்கப்படுகிறது. இதே வேளை தேசிக்காயின் விலை அதிகரித்துள்ளது. கிலோ 115 ரூபாவாக விற்கப்படுகிறது. (இ-31)

## குடும்பஸ்தரை காணோம்

சாவகச்சேரி, மே 13

மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த கதிரன்-பொன்னுத்துரை (வயது64) என்ற குடும்பஸ்தர் கடந்த 4 ஆம் திகதி வீட்டிலிருந்து வெளியேறிய பின்னர் இதுவரை வீடு திரும்பவில்லை என உறவினரால் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியில் உறவினர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-31)

# பெரும் இழப்புகளுடன் அரைவாசித் தூரம்வரை தாண்டிய "வெற்றி உறுதி" ராணுவநடவடிக்கை

வவுனியாவிலிருந்து வடக்குக்கான தரை வழிப்பாதையைத் திறப்பதற்கு ஆரம்பிக்கப்பட்ட ''வெற்றிஉறுதி'' இராணுவ நடவடிக்கைஇன்றுடன் ஒருவருடத்தைப்பூர்த்தி செய்கிறது.

இந்த இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு எழுந்துள்ள தடைகள், சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு வாய்ப்பை உருவாக்கி இருப்பதாக 'ராவய' சிங்கள வார இதழ் தெரிவிக்கிறது.

வவுனியாவிலிருந்து கிளிநொச்சி வரையான தரை வழிப்பாதையைத் திறக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட ''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கைக்கு இன்று 13 ஆம் திகதி ஒருவயது பூர்த்தியாகிறது.

சுதந்திர தினப் பொன் விழாவுக்கு முன்னர் இந்தத் தரைவழிப் பாதையை முற்றிலுமாகக் கைப்பற்றி விடலாம் என அரசினால் எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் இதுவரை இந்த நெடுஞ்சாலையின் பாதியளவு தூரத்தை மாத்திரமே அரசபடைகளால் கைப்பற்ற முடிந்தது.

### மாங்குளத்தில் பின்னடைவு

ஏப்ரல் 20ஆம் திகதி மாங்குளம் நகரைக் கைப்பற்ற பெரும் எடுப்பில் அரச படைகள் மேற்கொண்ட முயற்சிகளை முறியடிப்பதில் விடுதலைப் புலிகள் வெற்றிகண்டனர்.

விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பதில் தாக்குதலில் 31 படையினர் கொல்லப்பட்டனர். இரு படைவீரர்கள் காணாமல் போய் விட்டனர். 296 படையினர் காயமடைந்தனர்.

மாங்குளம் நகரைக் கைப்பற்றுவதற்காக அதனை அண்டிய பகுதிகளில் முகாம்களை அமைக்க அரசபடைகளுக்கு சுமார் 4 மாதங்கள் எடுத்துள்ளன.

ஏப்ரல் 20ஆம் திகதி இடம்பெற்ற பலத்த பின்னடைவானது. மாங்குளம் நகரை விரைவில் கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணத்தைக் கேள்விக்குறி ஆக்கி உள்ளது.

போதியளவு ஆளணியைச் சேர்த்த பின்னரே படிப்படியாக மாங்குளத்தைக் கைப்பற்றும் முயற்சியில் வெற்றி பெறலாம் எனச் சிந்திக்க வைத்துள்ளது. தரைவழிப் பாதையைக் கைப்பற்றும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு இன்னும் ஓராண்டு காலமாவது தேவை என்பது இதிலிருந்து தெரியவருகிறது.

### நிறைவேறாத நோக்கங்கள்

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட போது வவுனியாவில் இருந்து கிளிநொச்சி வரையான 58 மைல் தூர நெடுஞ்சாலையை விடுவிப்பது எனவும் — விடுதலைப் புலிகளைப் போருக்கு இழுத்து அவர்களில் கணிசமான எண்ணிக்கையானோரை கொல்வதன் மூலம் அந்த அமைப்பைப் பலவீனப்படுத்தலாம் என

**தமிழில்: கஜனி**

வும்– எதிர்பார்க்கப்பட்டது.

இந்த இரண்டு நோக்கங்களில் ஒன்றிலாவது பெருமளவில் அல்லது முற்றிலுமாக அரச படைகள் வெற்றி பெறவில்லை.

பெரிய அளவிலான எதிர்ப்புகளை மேற்கொள்வதற்குரிய ஆளணித் தட்டுப்பாடு விடுதலைப் புலிகள் தரப்பில் நிலவுவதாக தெரியவில்லை. ஆனால் இந்தப் பிரச்சினை இராணுவத் தரப்பில் உருவாகியுள்ளது.

புதிதாக 15 ஆயிரம் படையினரை இராணுவத்தில் சேர்க்கும் வரை ''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்வதை நிறுத்தி வைத்ததில் இருந்து இது தெளிவாகிறது.

தற்போது ஒரு வருடம் பூர்த்தியடைந்துள்ள இந்த இராணுவ நடவடிக்கையின் போது சுமார் 1500 படையினர் பலியாகியுள்ளனர். சுமார் 7 ஆயிரம் படையினர் காயமடைந்துள்ளனர். இருப்பினும் ஏற்பட்டுள்ள இந்த இழப்புகளுக்குப் பிரதிபலன் எவையும் கிடைக்கவில்லை.

### தோல்வியின் பின்னணியில் உருவான நம்பிக்கை

இந்த நிலைமையானது யுத்தத்தில் தொடர்ந்து நம்பிக்கை வைப்பது நியாயமானது என்ற நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என வலியுறுத்தும் நிலைமையையும் உருவாக்கியுள்ளது.

இவ்வாறான நிலைமையின் பின்னணியே பிராந்திய வல்லரசுக்குப் பதிலாக உலக வல்லரசு எனக் கருதப்படும் அமெரிக்கா பிரச்சினைக்கு மத்தியஸ்தம் வகிக்கும் நிலைமையைத் தோற்றுவித்துள்ளது

ராஜீவ்காந்தியின் படுகொலை காரணமாக கடந்த காலங்களில் இந்தியாவும் விடுதலைப்புலிகளும் ஒருவருக்கொருவர் எதிரிகள் என்ற நிலை இருந்தது எனவே போர்வழி முறைகள் தவிர்ந்த வேறு வழிமுறைகளில் இந்தியா நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தலையிட்டு விடுதலைப்புலிகளுடன் உடன்பாடு காணக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கவில்லை.

ஆனால்அமெரிக்காஇவ்விடயத்தில் தலையிடுமானால், தமது தரப்புக் குறித்து பக்கச்சார்பான வழியைப் பின்பற்றும் என விடுதலைப் புலிகள் கருதவில்லை.

நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அமெரிக்கா இவ்விடயங்களில் தலையிடுமானால், விடுதலைப்புலிகளை யுத்தரீதியாக தோற்கடிப்பது என்றநிலைப்பாட்டுக்கு அதன் ஆதரவு கிடைக்கும் என்று கூற முடியாது? அதற்குப் பதிலாக பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளுமாறு இருதரப்பாருக்கும் அழுத்தம் கொடுக்கும் நிலைமை உருவாகும்.

இனப் பிரச்சினைக்கு தீர்வினைக் காண்பதற்கு மேலதிகமாக பிரபாகரன் உட்பட புலிகள் அமைப்பினரின் எதிர்காலம் குறித்த பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வினைக் கண்டால் மாத்திரமே மூன்றாவதுதரப்பாக இவ்விடயத்தில் தலையிடும் எவராலும் இனப்பிரச்சினைக்குப் பயன்தரும் தீர்வினைக் காணமுடியும்.

இவ்வாறு காணப்படும் தீர்வு எவ்வளவு சிறந்ததாக விளங்கினாலும் முக்கிய இரு அரசியல் கட்சிகளின் உடன்பாட்டைப் பெற்றால் மாத்திரமே அந்தத் தீர்வு பயன்தரும் விதத்தில் அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### வேண்டுகோள

அமரர் பேராசிரியர் மகேஸ்வரனின் தெளிவான புகைப் படங்கள் வைத்திருக்கும் அவரின் மாணவர்கள், நண்பர்கள் அவற்றை இரவலாக பல்கலைக்கழக இரசாயனத் துறையில் சமர்ப்பித்து உதவுமாறு வேண்டப்படுகின்றனர். (55949)

### கோழி மருந்து

13-05-98 காலை பத்து மணியளவில் கோழிகளுக்கான றனிக்கட், தம்புரோ மருந்து வழங்கப்படும். எம்மிடம் கோழிக்குஞ்சுகள் வாங்கியோர், மற்றும் கோழிகளுக்கு மருந்து தேவைப்படுவோர் உடன் வந்துபெற்றுக் கொள்ளவும். 'மல்லிகாபதி' சந்தை முன் ஒழுங்கை, மானிப்பாய். (55952

### ஆங்கிலக்கல்வி

பத்து மாணவர்களை மட்டும் ஒரு வகுப்பில் சேர்த்து தனித்தனி கவனம் கொடுத்து ஆங்கிலம் பேசுவதில் சிறந்த மாணவர்களை உருவாக்குகிறோம். ஆசிரியர்:- ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, ஆங்கிலக்கல்வி நிலையம், 426, (302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (55958)

### கைமாறப்பட்டது

ஸ்ரானலிரோட்டில் உள்ள ஹாட்வெயார்ஸ்ரோர்ஸுக்கு முன ஏசியாதுவிச்சக்கரவண்டி ஒன்று கைமாறப்பட்டது அதை திருப்பி ஒப்படைத்து தமது வண்டியைப் பெற்றுக் கொள்ளவும். முகவரி:- பெருமாள் கோயில் காரியாலயம், யாழ்ப்பாணம். (55960)

## இலவசமாக விவசாய உள்ளீடுகள்

அரியாலை மே. 13

அளவெட்டி, மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தின் அனுசரணையுடன் அளவெட்டி, மல்லாகம் கிராம சேவையாளர்களினால் தெரிவு செய்யப்பட்ட 120 பயனாளிகளுக்கு இலவசமாக விவசாய உளளீடுகள் வழங்கப்படவுள்ளன.

பெயர் நிறுவன யாழ். பிராந்தியத்தின உதவியுடன் இவ் விவசாய உள்ளீடுகள் வழங்கப்படும். (இ-17)

## சைவசித்தாந்த வகுப்பு

கொழும்புத்துறை, மே 13

யாழ்ப்பாண மாவட்டத்தில் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான சைவ சித்தாந்த வகுப்பு எதிர்வரும் 1 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8 30 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை கொழும்பு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் தலைமையில் நடைபெறும். (இ-30)

## இலவச தையல் வகுப்பு

கொழும்புத்துறை, மே 13

யாழ். அரியாலை மத்தி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் அண்மையில் இலவசமாக தையல் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

சங்க மண்டபத்தில் நடைபெற்று வரும் இப்பயிற்சி வகுப்பில் 30 பேர் பங்குபற்றி வருகின்றனர்.

வாரத்தில் ஐந்து நாள்கள் இப்பயிற்சி வகுப்பு நடைபெற்று வருவதாக சங்கத்தின் தலைவர் மு. விசுவநாதன் தெரிவித்தார்.

(இ-30)

## மூன்று நாள் செயன் முறைப்பயிலரங்கு

HAIR STYLE & MAKE UP

மே: 15,16,17 காலை 8·30 முதல்

★ சான்றிதழுடன் கூடிய இப் பயிற்சியில் ஆர்வமுள்ள எவரும் கலந்து கொள்ளலாம்.

**தூரிகை**

சட்டநாதர் வீதி, நல்லூர்.

(55933)

## முக்கிய அறிவித்தல்


வெகு விரைவில் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு நாள் முழுவதற்குமான மின் விநியோகம் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. தற்போது அநேகமான பாவனையாளர்களது மின்மானிகள் சீராக இயங்குவதில்லை. இவற்றை மாற்றுவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுக்கின்றோம். அதுவரை ஒவ்வொருவருடைய வீடுகள்/நிறுவனங்கள் ஆகியவற்றில் பொருத்தப்பட்டுள்ள மின் குமிழ்கள், உபகரணங்கள் ஆகியவற்றை கணக்கெடுத்து அவற்றிற்கு அமைய மின் பாவனை அலகுகள் மதிப்பீடு செய்யப்பட்டு மாதாந்த மின் பட்டியல் வழங்கப்படும். இம்மதிப்பீடு செய்வதற்காக எமது ஊழியர்கள் தங்கள் வீடுகள்/நிறுவனங்கட்கு வருகை தரும் போது அவர்களுக்கு வேண்டிய விவரங்களை வழங்குவதுடன் பார்வையிடுவதற்கும் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**இலங்கை மின்சார சபை,**
சூழல் மற்றும் அபிவிருத்தி
வேலைகளுக்கு கைகொடுக்கும்
இலங்கை மின்சார சபை.

மின் பொறியியலாளர்,
யாழ். பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
125, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/3694)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



பொன்னம்பலம் ஆச்சிமுத்து

தோற்றம்: 08-09-1908 மறைவு: 13-04-1998

காலஞ்சென்ற எனது தாயாரின் வீட்டுக் கிருத்திய தினமாகிய இன்று அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

எனது தாயாரின் மறைவுச் செய்தி கேட்டு உடனே உதவியவர்களுக்கும், இறுதிக் கிரியைகளைப் பொறுப்பேற்று நடத்தியவர்களுக்கும், தபால் மூலம் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்தோருக்கும், மற்றும் உற்றார், உறவினர். நண்பர்களுக்கும் நோயுற்ற போது பேருதவி புரிந்த Dr. சொர்ணலிங்கம் (கொக்குவில்) Dr. அம்பிகைபாகன் (காரைநகர்) ஆகியோருக்கும் எனதும் எனது குடும்ப அங்கத்தவர்களினதும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பொ. புவனேஸ்வரி [மகள்]

''பொன்மனை'',
பொன்னாலை,
சுழிபுரம். (55961)

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் தனபாலசிங்கம் (சந்திரன்)

[அம்பாள் ஸ்ரோர் உரிமையாளர், திருநெல்வேலி.]

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் தனபாலசிங்கம் [சந்திரன்] (நல்லூர் வர்த்தக சங்க தலைவரும், திருநெல்வேலி அம்பாள் ஸ்ரோர் உரிமையாளரும்) 11-05-98 திங்கட்கிழமை காலமானார். அன்னாரது இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மனைவி

பொற்பதி வீதி,
கொக்குவில். (55959)

## செல்லையா குமாரசாமி

(யாழ்ப்பாணம், சிவதொண்டர் நிலைய அங்கத்தவர்)

இணுவில் கிழக்கைச் சேர்ந்த செல்லையா குமாரசாமி 11-05-98 அன்று காலமானார்.

இவர் செல்லையா சின்னம்மா தம்பதிகளின் மகனும், அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், தர்மலிங்கம், தியாகராஜா, சண்முகநாதன் காலஞ்சென்ற அன்னம்மா காலஞ்சென்ற தங்கம்மா, மற்றும் பரமேஸ்வரி, கமலாம்பிகை, சரஸ்வதி, ஞானமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமகள், சிவயோகநாதன், கலைவாணி, சிவகெங்கா ஆகியோரின் அன்பு தந்தையும், காலஞ்சென்ற மகேந்திரன், தங்கவேல் ஆகியோரின் மாமனாரும், ஸ்ரீமகள், கோபிஸ்கண்ணா, ரவிராஜ், நிருஜா, கிருஷாந்தி, ஜனனி, விபிஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13-05-98) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
பொ. தங்கவேல்:
(மருமகன்)

மஞ்சத்தடி,
இணுவில்.
(55948)

## குணசாமி தங்கராசா

உடுப்பிட்டி வீதி, தொண்டமானாற்றைச் சேர்ந்த குணசாமி தங்கராசா அவர்கள் 11-05-98 அன்று காலமானார்.

இவர் குணசாமி பூபதி தம்பதிகளின் அருமை மகனும், த. சிவானந்தியின் அன்புக் கணவரும், கமலக்கண்ணன், கயல்விழி, கல்யாணி, கௌரீசன் ஆகியோரின் தகப்பனாரும், மகேஸ்வரி, குண்டுமணி, யோகேஸ்வரி, மங்களேஸ்வரி, ஆகியோரின் சகோதரனும், இராசசிங்கம் தங்கம் ஆகியோரின் மருமகனும், இ. சிவலிங்கம், ஞானசேகரம், தியாகராசா, தனசேகரம், வாமதேவன், நேசம், திருமலர், புனிதவதி, சிவஞானம், சிவலிங்கம் ஆகியோரின் மச்சானும், பஞ்சலிங்கம், சந்திரயோகன் விவேக் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இவரது இறுதிக் கிரியைகள் காட்டுப்புலம் தொண்டமானாற்று மயானத்தில் 12-05-98 அன்று நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தகவல்:
மு. பஞ்சலிங்கம்
(மைத்துனர்)

உடுப்பிட்டி வீதி,
தொண்டமானாறு. (55950)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 30 — 05 — 1923



மறைவு: 24 — 04 — 1997

அமரர் சின்னத்தம்பி வைத்திலிங்கம்பிள்ளை

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தது
வேண்டும் செல்வம் தேடி வைத்தாய்
நீண்டு நினைக்கும் எம் உள்ளங்கள்
யாண்டும் மறக்குமோ நின் கருணை?

மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

நீர்வேலி மேற்கு,
நீர்வேலி. (55955)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தடங்கல் ஏன்?

யாழ்ப்பாணக் குடாநாட்டை நாட்டின் ஏனைய பகுதிகளுடன் தொடுக்கும் தரைவழிப் பாதை நீண்ட காலமாகவே மூடிக்கிடக்கிறது. இதனால் யாழ்ப்பாணத்தின் பொருளாதாரம் மிகப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

உதாரணமாக, குடாநாட்டின் விவசாய மற்றும் கடற்றொழில் உற்பத்திகளை, முன்னரைப் போன்று வெளிமாவட்டங்களில் சந்தைப்படுத்தும் வாய்ப்பும் வசதிகளும் மிகவும் அருகிவிட்டன.

இந்த நிலையை ஓரளவேனும் மாற்றுவதற்காக, குடாநாட்டின் விளைபொருள்கள் மற்றும் உற்பத்திப் பொருள்களை வான் வழியாக விமான மூலம் எடுத்துச் செல்வதற்குத் திட்டமிடப்பட்டது. இதற்காக தனியார் விமானசேவை நிறுவனமான "லயன் எயர்" பல லட்சம் ரூபா செலவில் சரக்கு ஏற்றி இறக்கும் விமானத்தையும் கொள்வனவு செய்துள்ளது. ஆனால் ஆறு மாதங்கள் கடந்தும் அந்தச் சேவையைத் தொடங்க முடியவில்லை; தடங்கல் நிலை!

காரணமோ வியப்பையும். எரிச்சலையும் தருவதாகும். விமானத்தில் ஏற்றப்படும் சரக்குப் பொதிகளுக்குள் பாதுகாப்புக்குக் குந்தகமான பொருள்கள் வைக்கப்பட்டுள்ளனவா என்பதனை சோதனை செய்ய பயன்படுத்தப்படும் நவீன "எக்ஸ்ரே" கருவி ஒன்றை வாங்கிய பின்னரே சரக்கு விமான சேவையைத் தொடங்க அனுமதிக்க முடியும் — என்று பாதுகாப்பு அமைச்சு ஆரம்பத்தில் தெரிவித்தது.

ஆனால் ஆறு மாதங்களாகியும் அந்தக் கருவி வந்து சேரவில்லை. உரிய கவனம் எடுத்திருந்தால், குடாநாட்டுப் பொருளாதாரம் மேலெழும்ப வேண்டும் என்ற அக்கறை இருக்குமானால், ஒரு மாதத்தில் அந்தக் கருவியைத் தருவித்திருக்க முடியாதா, என்ன?

குடாநாட்டு மக்களின் உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்து, அவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த அரசு இதய சுத்தியுடன் செயற்படவில்லை.

அரசாங்கத்தின் அக்கறை இன்மையால், வெங்காயம், வாழைப்பழம் போன்ற விளைபொருள்கள் அழுகிப் பழுதடைகின்றன. விவசாயிகள் நட்டம் அடைகிறார்கள். வெங்காயத்தின் கொள்விலை அளவுக்கு ஏற்ப ஒரு கிலோ 22 ரூபா, 16 ரூபா என நிர்ணயிக்கப்பட்டிருக்க, தரகர்கள் 9 ரூபாவுக்கு வாங்குகிறார்கள்!

1996ஏப்ரலில்வலிகாமம் மக்கள் மீளத்தொடங்கிய நாள் முதல், உள்ளூர் உற்பத்திகளுக்கு நியாயமான விலைபெற்றுத் தருவதாகப் பெரிதாகப் பேசப்படுகிறது; மாநாடுகளும் நடத்தப்படுகின்றன. ஆனால் கிடைத்த பயன் எதுவுமில்லை.

உண்மை இவ்வாறிருக்க, குடாநாட்டில்இயல்புநிலை திரும்புவதாகப் பிரசாரம் செய்யப்படுகிறது. இப்பகுதியின் பொருளாதாரம் மேம்படாமல் இயல்பு நிலை எப்படித் தோன்றும்? எல்லாமே சுத்தமான ஏய்க்காட்டலின் ஒவ்வோர் அம்சம் தான்!

# பலரைப் பாதிக்கும் நீரிழிவு நோய்; அதனுடன் சுகவாழ்வு பெற வழிகள்

நீரிழிவு நோய் இப்போது சகல தரப்பினரையும் பாதிக்கும் ஒரு பொது வியாதியாகி வருகிறது. இலங்கையிலும் நாளாந்தம் நீரிழிவு நோயாளர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

நீரிழிவு நோயைக் குணப்படுத்தவோ அல்லது வராமல் தடுக்கவோ முடியாது. இதனால் நோயைக்கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதிலேயே நாங்கள் கவனம் செலுத்த வேண்டும்.

எப்போதும் இரத்தச் சீனி மட்டத்தை கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பது முக்கியமாகும். கண், சிறுநீரகம், நரம்புகள், மூளை என்பனவற்றுக்கு ஏற்படும் பாதிப்புகளைத் தடுப்பதற்கான ஒரே வழி இரத்தச் சீனி மட்டத்தை கட்டுப்படுத்துவதாகும். இதை அடைவதற்கான சிறந்தவழி கட்டுப்படுத்திய உணவை உண்ணுதலாகும்.

சிலர் கட்டுப்படுத்திய உணவை உண்பதன் மூலம் மட்டும் தங்களது நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும். வேறு சிலருக்கு மருந்துகளும் இன்சுலினும் தேவைப்படலாம்.

கட்டுப்படுத்திய உணவை உண்பதன் மூல காரணம் குருதிச் சீனி மட்டம், குருதியில் உள்ள கொலஸ்ரோல் அளவு, அவரின் உயரத்திற்கேற்ற நிறை என்பவற்றை சரியான அளவில் பேணுவதாகும்.

இதனைப் பின்பற்றுவதன் மூலம் அவர் பட்டினியாக மாட்டார். அவருக்குச் சரியான அளவில் உணவுச்சத்துக்கள், விற்றமின்கள், கனிப்பொருள் என்பவை நாள் முழுவதும் கிடைக்கும்.

சிபார்சு செய்யப்பட்ட உணவு கட்டுப்பாட்டு திட்டத்தின் முக்கியமான அங்கங்கள்.

## உணவைக் கட்டுப்படுத்துவதே நோய்க்குப் பிரதான மருந்து

(அ) சீனியுள்ள உணவை உட்கொள்ளாதிருத்தல்.

(ஆ) அதிகளவு நார்ச்சத்து உள்ள மாப்பொருள் உணவுகளை உட்கொள்ளல்.

(இ) குறைந்தளவு சத்துள்ள, குறைந்தளவு கொழுப்புள்ள உணவை உட்கொள்ளல்.

### சீனியுள்ள உணவை உட்கொள்ளாதிருத்தல்

இங்கு சீனியென்று குறிப்பிடுவது குளுக்கோசு, சாதாரணமாக பாவிக்கும் சீனி, சர்க்கரை பாணி என்பனவாகும். இவ்வகையான உணவுகளை உட்கொள்ளின் அவை இலகுவாக குளுக்கோசாக மாற்றப்பட்டு இரத்தச் சீனி அளவை அதிகரிக்கும். இவற்றை சிறிதளவில் எடுப்பதும் நீரிழிவு நோயின் கட்டுப்பாட்டிற்கு நல்லதல்ல. ஆகவே நீங்கள் இவற்றை முற்றாகத் தவிர்க்க வேண்டும்.

பலருக்குச் சீனியில்லாமல் தேநீர், கோப்பி என்பவற்றை அருந்துவது கடினமாக உள்ளதை காணக்கூடியதாகவுள்ளது. இவர்களுக்கு செயற்கை முறையில் செய்யப்பட்ட இராசயனப் பொருள்கள் கடைகளில் உண்டு. இவை நீரிழிவு நோயின் கட்டுப்பாட்டிற்கு பாதிப்பை ஏற்படுத்தாது.

சொக்லேட், ஐஸ் கிறீம் கேக் என்பவற்றைத் தயார் செய்யும் போது சீனி சேர்க்கப்படுகிறது. எனவே இவ்வகையான உணவுகளைத் தவிர்க்க பழகிக் கொள்ள வேண்டும்.

கடைகளில் செயற்கையாக செய்யப்பட்ட இனிப்பூட்டும் இரசாயனப் பொருள்கள் கொண்ட உணவுகள் உள்ளன. இவை குளுக்கோசைக் கொண்டிரா. இவை நீரிழிவு நோயாளிகளுக்கென்று செய்யப்பட்டவை ஆகும். இவை இரத்தச்சீனி மட்டத்தை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் போது உட்கொள்ளப்படக் கூடியவை என்பதால் இவை பெரிதளவும் நீரிழிவு நோயாளிகளால் விரும்பப்படுகிறது.

மதுபானத்தில் அதிகள்வு சக்தி (கலரி) உள்ளது. இதில் எதுவிதமான உணவுச்சத்துக்களும் இல்லை. ஆனால் இதில் அதிகளவு கலரி (சக்தி) இருப்பதால் இது உங்களது நிறையை அதிகரிக்கச் செய்யும். சில வகையான பீயர், கசிப்பு, சாராயம், திராட்சை ரசம் என்பவற்றில் சீனி உண்டு. இதனால் மதுபானம் அருந்துதல் நீரிழிவு நோய்க்குப் பாதகமானது. மதுபானம் உங்களது பசியைக் கூட்டுவதால் உங்கள் உணவை கட்டுப்படுத்துவது கடினமாக இருக்கும். இதனால் மதுபானத்தை தவிர்த்தல் நல்லதாகும்.

### அதிகளவு நார்ச்சத்து உள்ள மாப்பொருள் உணவை உட்கொள்ளல்

முன்னர் சிறிதளவு மாப்பொருள் மட்டுமே உணவில் அனுமதிக்கப்பட்டது. நார்ச்சத்து அதிக மாப்பொருள்கள் உண்ணுவதானால் அதிகள்வு உணவு உட்கொள்ளலாம். நார்ச்சத்துக்களின் பயன்களாவன:

1. நார்ச்சத்துக்கள் மாப்பொருளிலிருந்து உருவாகிய குளுக்கோசை மெதுவாகவும் ஒரே சீரான அளவிலும் உணவுத்தொகுதியிலிருந்து இரத்தச் சுற்றோட்டத்தினுள் உறிஞ்ச உதவும்.

நார்ச்சத்துக்கள் உங்கள் உணவின் பாரத்தைக் கூட்டுவதால் இலகுவாக சிறிதளவு உணவுடனேயே பசியைத் தீர்ப்பதுடன், மலச்சிக்கலையும் தடுக்கும். உங்களுக்கு மீண்டும் பசி ஏற்பட நீண்ட நேரம் எடுக்கும்.

நார்ச்சத்துக்களுடைய மாப்பொருள் கொண்ட உணவுகளிற்கு சில உதாரணங்கள்;

சிவத்த அரிசி, சிவத்த அரிசிமா, குரக்கன்மா, உளுந்துமா, பயறு, கடலை, சோயா தானியங்கள், சிவத்த அரிசிமா, குரக்கன்மா என்பவற்றினால் செய்யப்பட்ட அப்பம், பிட்டு, இடியப்பம், ரொட்டி.

தீட்டிய அரிசியும் தீட்டாதரிசிமாவும் தவிர்க்கப்பட வேண்டும். நார்ச்சத்துடைய மரக்கறி வகைகளை போதியளவு உண்ணுதல் நல்லது.

குறைந்த சத்துள்ள குறைந்தளவு கொழுப்புள்ள உணவை உட்கொள்ளல்:

சாதாரணமாக நீரிழிவு நோயுடையவர்கள் அதிக பாரம் உடையவர்களாக இருப்பதால் குறைந்தளவு சத்துள்ள உணவை உட்கொள்ள வேண்டும். இதனை கொழுப்பைக் குறைவாக உண்பதன் மூலம் சாதிக்கலாம். இரண்டு வகையான கொழுப்பு வகைகள் உண்டு. இவை விலங்குக் கொழுப்பு [மாமிசம்], தாவரக் கொழுப்பு என்பவையாகும். விலங்குக் கொழுப்பும், தேங்காய் எண்ணெயில் உள்ள கொழுப்பும் உங்கள் குருதியில் உள்ள கொலஸ்திரோல் அளவைக் கூட்டுவதன் மூலம் மாரடைப்பை ஏற்படுத்துவதால் அது உங்களுக்கு நல்லதல்ல. எண்ணெயில் பொரித்த அல்லது எண்ணெயில் பிரட்டிய உணவுகளைத் தவிர்க்கவும்.

எனவே, ஆடை நீக்காத பால், சீஸ், பட்டர், முட்டை மஞ்சல் கரு, பன்றி இறைச்சி, ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, ஈரல் என்பவற்றை உட்கொள்ளாமல், ஆடை நீக்கியபால் என்பவற்றை உட்கொள்ளவும்,

நீரிழிவு நோயாளிகள் ஒரு வாரத்திற்கு மூன்று முட்டைகள் மட்டுமே உட்கொள்ள வேண்டும். முட்டை வெள்ளைக்கரு எவ்வளவு வேண்டுமானாலும் உட்கொள்ளலாம்.

கோழி இறைச்சி, மீன் என்பவற்றை உட்கொள்வதன் மூலம் நீங்கள் உங்களுக்குத் தேவையான விலங்குக் கொழுப்பைப் பெற்றுக் கொள்ளலாம். இவற்றை உட்கொள்வதன் மூலம் தேவையற்ற கொழுப்பு உடம்பில் அதிகளவில் சேர்வதையும் தடுக்கலாம்.

மேற்குறிப்பிட்டவாறு தேங்காய் எண்ணெயில் உள்ள கொழுப்பு விலங்குக் கொழுப்பைப் போன்றது. எனவே தேங்காய் எண்ணெயைப் பாவிப்பதை குறைத்துக் கொள்ளவும். தேங்காய் எண்ணெயைப் பாவிப்பதை விட நல்லெண்ணெயைஅல்லது சோள எண்ணெய்யைப் பாவிப்பது சிறந்தது.

### பழங்கள்

எல்லாப் பழங்களையும் தேவைக்கேற்ற அளவில் உண்ணலாம். பழங்களில் உள்ள பிரக்ரோசு இலகுவாக குளுக்கோசாக மாற்றப்படமாட்டா என்பதனால்இவைநீரிழிவு நோயாளிகளுக்குப் பாதகமானவை அல்ல.

பழங்களில் உள்ள நார்ச்சத்துக்கள் குளுக்கோசு

(9 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழ் சுருக்கெழுத்துத் தந்தை

திரு. சி. இராமலிங்கம் தெல்லிப்பழைக்கு அண்மையில் உள்ள தையிட்டிப்புலம் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அவர் தமது ஆரம்பக் கல்வியை பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலையில் பயின்றவர். அதைத் தொடர்ந்து தமிழகம் சென்று சிதம்பரம் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் திரு. எஸ். சுப்பிரமணியம் முறையிலான தமிழ் சுருக்கெழுத்தையும் மற்றும் ஆங்கில, தமிழ் தட்டச்சையும் பயின்றார். சென்னை அரசினரால் நடத்தப்பட்ட தொழில்நுட்பப் பரீட்சையில் தமிழ் சுருக்கெழுத்துப் பாடத்தில் முதலாம் தரத்தில் சித்தி பெற்றார்.

இவர் 1951 இல் இலங்கை வானொலியில் தமிழ் தட்டெழுத்தாளராக கடமையாற்றினார். 1952 ஆம் ஆண்டில் அரச கரும மொழித்திணைக்களத்தால் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் சுருக்கெழுத்துத் தட்டச்சுப் பயிற்சிக்குப் போதனாசிரியராக நியமிக்கப்பட்டார். அரச நிறுவனம் ஒன்றில் முதல் தமிழ் சுருக்கெழுத்துப் போதனாசிரியராகக் கடமையாற்றக் கிடைத்த பெருமை இவரையே சாரும்.

அங்கு அவர் 1959 ஆம் ஆண்டு வரை கடமையாற்றினார்: பின்னர் அப்பயிற்சி நிலையமும் மூடப்பட்டது. அதனைத் தொடர்ந்து இவர் கொக்குவில் கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரியில் (தற்போது யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரி) போதனாசிரியராகக் கடமையாற்ற அழைக்கப்பட்டார். இங்கு அவர் ஒய்வு பெறும் வரை கடமையாற்றினார். இடைப்பட்ட காலத்தில் சுமார் 2 வருடங்கள் கிழக்கிலங்கையில் உள்ள சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரியில் கடமையாற்றி உள்ளார்.

இவர் தனது சேவைக் காலத்தில் ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு சுருக்கெழுத்து தட்டச்சு கலைகளைத் திறம்பட போதித்ததன் காரணமாக அவர்களில் பலர் நாடாளுமன்ற அறிக்கையாளர்களாகவும், சுருக்கெழுத்தாளர்களாவும், தட்டெழுத்தாளர்களாகவும், சுருக்கெழுத்து - தட்டெழுத்துப் போதனாசிரியர்களாகவும் மற்றும் பல உயர் பதவிகளை வகிப்பவர்களாகவும் உள்ளார்கள். இதற்கு அவரது தன்னலம் கருதாத சேவையே காரணமாகும்.

இவர் சேவை மனப்பான்மை, விடாமுயற்சி, உற்சாகம் ஆகிய நற்குணங்கள் ஒருங்கே அமையப் பெற்றவர். மேற்குறிப்பிட்ட காரணங்களுக்காக அவரது மாணவர்களும், நலன் விரும்பிகளும் ஒன்றுகூடி 29—03—76 இல் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வெள்ளிவிழா ஒன்றைக் கொண்டாடியமையை தமிழ் கூறும் நல்லுலகம் என்றும் மறக்காது, இந்த விழாவின் போது மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது, அந்த மலருக்கு இலங்கைப் பல்கலைக்கழக யாழ். வளாகத் தலைவர் கலாநிதி க. கைலாசபதி, பிரபல தமிழக எழுத்தாளர் அகிலன், தஞ்சாவூர் சுவாமி தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் திரு. என். மோகன் தமிழ் நாடு சட்ட மன்ற அறிக்கையாளர் திரு. ஜி. எஸ். அனந்த நாராயணன் உட்படப் பல அறிஞர்கள் ஆசிச் செய்தி வழங்கினர், இது ஆசிரியர் அவர்களின் சுருக்கெழுத்துப்பாண்டியத்தி யத்தை [illegible]

( 8 ஆம் பக்கம் பார்க்க)

க. வ. சிவச்சந்திரதேவன்
(செயலாளர்,
வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்.)

## நாளை

சித்திரை - 31

வியாழக்கிழமை

திதி: திருதியை

முன்னிரவு 10. 49 வரை.

நட்சத்திரம்: கேட்டை

முற்பகல் 11.50 வரை

சித்தம்

சுபநேரம்: 14.23 -8.53

ராகுகாலம்: 1.23 -2.53

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

சிரிக்காத நாள் தான் ஒருவன் வாழ்க்கையில் வீணாகி விட்ட நாள்களில் மிகவும் மோசமான நாளாகும்.

*நிக்கலஸ் சாம்போர்ட்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி பிரதேச சபை பல அபி. திட்டங்களை மேற்கொள்ளும்

தென்மராட்சி, மே 13

சாவகச்சேரிபிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பல அபிவிருத்தி வேலைகள் செய்ப்பட உள்ளன.

பிரதேச சபைக் கூட்டத்தில் இது குறித்து முடிவு செய்யப்பட்டது.

இப் பிரதேசத்தில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள ஆறு வீதிகளை தலா ஒரு லட்சம் ரூபா செலவில் திருத்தி அமைக்கவும்—

பிரதேச சபை தலைமை அலுவலகத்துக்கு முன்னால் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் சிறுவர் பூங்கா அமைக்கவும்—

எழுதுமட்டுவாள் சந்தைக்கு அருகில் மூன்று இலட்சம் ரூபா செலவில்— ஆயுர்வேத மருந்தகம் நிர்மாணிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

கொடிகாமம் சந்தையைப் புனரமைக்க ரூபா ஏழு இலட்சமும், கொடிகாமத்தில் நவீன சந்தை அமைக்க 30 இலட்சம் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளதாக பிரதேச சபைத் தலைவர் பொ. அன்ரன் தெரிவித்தார்.

அபிவிருத்தி வேலைகளுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டதும் வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

# பழைய பூங்காவில் மரம் வெட்டுதல் தொடர்கிறது

யாழ்ப்பாணம், மே 13

யாழ், செயலகத்துக்கு முன்பாகவுள்ள பழைய பூங்காப் பகுதியில் களவாக மரங்களை வெட்டுதல் மீண்டும் தொடங்கியுள்ளது.

மாலை வேளைகளில்பழைய பூங்காப் பகுதிக்குள் நுழைபவர்கள் மரங்களின் கொப்புகள் முதலியவற்றை வெட்டுவதோடு மரங்களின் வேரையும் அகழ்ந்து கொண்டு சென்று விடுகின்றனர்.

ஏற்கனவே இவ்விடயம் குறித்து பத்திரிகைவாயிலாக அறிவித்திருந்தும் இதற்கான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையென மக்கள் பலரும் விசனம் தெரிவித்துள்ளனர். (இ-7)

# நினைவுத்தூபி உடைப்பு

நெடுந்தீவு மே 13

நெடுந்தீவு பிரதான வீதி புனிதயுவானியார் கோயில் வீதிச் சந்திப்பில் கடந்த பல வருடங்களாக இருந்துவந்த தியாகிகளின் நினைவுத்தூபிகள் இனந்தெரியாதவர்களால்உடைக்கப்பட்டுள்ளன. (இ-111)

# கடற்றொழில் கட்டுப்பாட்டினால் தீவக மீனவர்கள் பெரும் பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 13

வடபகுதிக் கடற் பரப்பில் போதிய கடல் உற்பத்திப் பொருள் வளம் இருக்கின்ற போதிலும் தற்போது அமுலில் உள்ள மீன்பிடி நேர நிர்ணயத்தாலும், கடல் வலயப் பாதுகாப்புச் சட்டத்தினாலும் தமது தொழிலை சிறப்பாகச் செய்ய முடியவில்லையென தீவகக்கடற்றொழிலாளர்கள்கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில்இரவு, பகல் என்ற இரு நேரங்களிலும் கடற்றொழிலில் ஈடுபட்டு வந்த நாம் இன்று குறுகிய நேரமேகடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்றோம். இதனால் எமது குடும்பங்களின் நாளாந்தச் செலவுக்கே பெரிதும் கஷ்டப்பட வேண்டியுள்ளது.

எனவே இத்தகைய நிலை விரைவில் மாறவேண்டும்; நாம் மீண்டும் கடந்த காலங்கள் போல் கடற்றொழிவில் ஈடுபட்டு கடல் உற்பத்திப் பொருள்களின் ஏற்றுமதி மூலம் போதிய வருமானத்தைப் பெறவேண்டும்.

இவ்வாறு தீவககடற்றொழிலாளர்கள் சார்பில் யாழ். மாவட்ட விவசாய விரிவாக்க உதவி அலுவலரைச்சந்தித்த பிரதிநிதிகள் தெரிவித்தனர். (இ-7)

# புலிகள் பற்றிய தகவலை கொடுக்க தவறினராம்

## நாவற்குழி பெண்மீது வழக்கு

கொழும்பு, மே 13

கடந்த வருடம் ஜூன் மாதம் கொழும்பு மெசஞ்சர் வீதியிலுள்ள லொட்ஜ் ஒன்றில் வைத்து சந்தேகத்தின் பேரில் கைதான இளம்பெண்களிடம் புதன்கிழமை குற்றப் பத்திரிகைகையளிக்கப்பட்டது.

நாவற்குழியைச் சேர்ந்த செல்லையா விஜயரஞ்சனி (வயது 27) மீது 1-1-89க்கும், 31-12-89 க்கும் இடைப்பட்ட காலத்தில் நாவற்குழியில் விடுதலைப்புலியான காயத்திரி என்பவர் பற்றித் தகவல் கொடுக்கத் தவறியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தைப் பதிவு செய்த உதவிப் பொலிஸ் அத்தியட்சர் அபயசிங்க கான்ஸ்டபிள் அனிப், பெண் கான்ஸ்டபிள் நிர்மலா, சப்– இன்பெக்டர் ஹரி உடுகம ஆகியோர் சாட்சிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மேல் நீதிமன்ற நீதிபதி நிமால் திசாநாயக்க முன்னிலையி இம் மாதம் 23ஆம் திகதி விசாரணை நடைபெறும். எதிரி சார்பில் சட்டத்தரணி திருமதி ஜோய் மகிழ்கணேஷ் காதேவன் ஆஜரானார். (இ-8-10)


உ

சுதுமலை

ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய

தர்மகர்த்தா சபை

**பகிரங்க ஏல விற்பனை**

மேற்படி ஆலயத்திற்குச் சொந்தமான உபயோகிக்க முடியாத பழைய பித்தளை, எவர்சில்வர், இரும்பு ஆகிய பொருள்கள் எதிர்வரும்

**17 – 05 – 98 ஞாயிற்றுக்கிழமை**

காலை 10 மணிக்கு

பகிரங்கமாக ஆலயத்தின் தெற்கு வாசல் மண்டபத்தில் ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

குறிப்பு:

1) ஏல விற்பனையின் போது கூடுதவான விலை கேட்பவருக்கு பொருள்கள் விற்கப்படும்.
2) பொருள்களை வாங்குபவர் பணத்தினை முழுமையாகச் செலுத்தி, அன்றைய தினமே பொருள்களை எடுத்துச் செல்ல வேண்டும்.
3) பொருள்களைப் பார்வையிட விரும்பின் 17-05-98 ஞாயிறு காலை 8.00 மணி தொடக்கம் 10.00மணி வரை மேற்படி ஆலயத்தில் பார்வையிடலாம்.
4) ஏல விற்பனை தொடர்பான சகல நடவடிக்கைகளையும் ஏற்றுக்கொள்ளவும் நிராகரிக்கவும் முழுமையான அதிகாரம் தர்மகர்த்தா சபைக்கே உரியதாகும்.

தர்மகர்த்தா சபை

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி
அம்மன் ஆலயம்,
சுதுமலை, மானிப்பாய்
12-05-98. [55408]


# மருந்துப் பெயர்: 3 மொழிகளிலும் விவரம்

கொழும்பு, மே 13

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் அடைக்கப்படும் போத்தல்கள், பெட்டிகள் ஆகியனவற்றில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் பெயர்கள் பொறிக்கப்படவேண்டும். இந்த உத்தரவை அனுசரிக்காத நிறுவனங்கள் மீது சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்படிசுகாதாரஅமைச்சின் உணவு ஆலோசனைக் குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

குறித்த உணவுப் பொருள் அல்லது மருந்து பற்றிய சரியான தகவல்கள் பொது மக்களைச் சென்றடைய வேண்டுமானால் இந்தச் சட்டத்தைக் கடுமையாகச் செயற்படுத்த வேண்டும் என்றநிலைமை உருவாகியுள்ளது எனவும் அவர் கூறினார். (இ–10)

# ஒரு வருடமாகியும் இன்னும் இல்லை

யாழ். மாவட்ட க. பொ. த. உயர்தரவகுப்பு விஞ்ஞான ஆசிரியர்களுக்கு கல்வித்திணைக்களத்தால் (வலயங்கள் 1, 2) ஆசிரியர் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு பங்குபற்றும் ஆசிரியர்களுக்கு நாளொன்றுக்கு 100 ரூபா படியும், பாடவிரிவுரைவழங்கும்வளஆளணியினருக்கு(ResourcePersonal) 300 ரூபா படியும் வழங்கப்படும்.

1997 ஏப்ரல் 11–ம்,12–ம் திகதிகளில், யாழ்ப்பாணம், வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற வலயங்கள் 1, 2 தாவரவியல் பாடக் கருத்தரங்கின் செயலமர்வு முடிய விஞ்ஞான பாடத்திற்குரிய உதவிக் கல்விப் பணிப்பாளர் இல்லாமையால் பங்குபற்றிய ஆசிரியர்களுக்கான படியும், வள ஆளணியினருக்கான படியும் பின்னர் வழங்கப்படும் என்ற உறுதிப்பாட்டில், மேற்படி செயலமர்வின் அமைப்பாளரான கல்வித்திணைக்கள அலுவலர், வவுச்சர்களில் முத்திரைகள் மீது கையொப்பங்களை வாங்கிக்கொண்டார்.

வலயம் – 1 க்கான கொடுப்பனவுகள் 1997 ஆம் ஆண்டிலேயே வழங்கப்பட்டுவிட்டன. ஆனால் இன்று வரை வலயம் - 2 க்கான தாவரவியல் பாடத்திற்கான கருத்தரங்குச் செயலமர்வில் கலந்து கொண்ட ஆசிரியர்களுக்கும், வள ஆளணியினருக்கும் இக்கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. இது பற்றி வலயம் 2 இன் விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பானரினதும், கல்விப் பணிப்பாளரினதும் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட போதும் இதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என்பது மிகவும் வேதனைக்குரியதாகும்.

1997 டிசெம்பர் மாதம் 26 ஆம், 27 ஆம் திகதிகளில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்ற க.பொ.த. உயர்தர வகுப்புக்குரிய தாவரவியல் கருத்தரங்கில் கலந்து கொண்ட ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு, வள ஆளணியினருக்கான கொடுப்பனவுகள் இன்று வரை வழங்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

குடாநாட்டில் மேலும் கல்வி வலயங்கள் பிரிக்கப்பட இருப்பதால் இதற்கு முன்னர் இக்கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு ஆவன செய்யும்படி சம்பந்தப்பட்டவர்களை பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் வள ஆளணியினர் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

ப. ஈஸ்வரநாதன்

பருத்தித்துறை.

# எத்தனை காலம் காத்திருப்பது?

புதுப்பொலிவுடன் நகர்ப்புறம் போல அழகாகக் காட்சி தந்த புத்தூர் சந்தியும், புத்தூர் கிழக்கும் (சாவகச்சேரி வீதி) அழகிழந்து சுடுகாடு போல் இன்று காட்சி தருகிறது.

1995 ஒக்ரோபர் மாதம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால் வீடுகள், கடைகள் தரைமட்டமாக்கப்பட்டு வான் பயிர்களும் அழிக்கப்பட்டுள்ளன. அது மட்டுமா? நிலத்தைத் தோண்டி பாரிய அணைகள் கட்டியுள்ளதோடு மிதிவெடிகளும் புதைக்கப்பட்டுள்ளன.

இப் பகுதியில் வாழ்ந்த மக்கள் உறவினர் வீடுகளிலும், வாடகை வீடுகளிலுமாக இருந்து நிம்மதியற்றுக் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கின்றனர். இப்பகுதியில் காணப்படும் மிதிவெடிகளை அகற்றி விடுமாறு அருகிலுள்ள இராணுவத்தினரைக் கேட்டபோதும் அவர்கள் சாக்குப் போக்குகளைச் சொல்லித் தட்டிக்கழித்து வருகின்றனர்.

யாழ்ப்பாணம் வழமைக்குத் திரும்பிவிட்டது என வெற்றிகரமாகப் பிரசாரம் செய்பவர்களுக்கு யாழ்ப்பாணத்துக்குள்ளேயே இடம்பெயர்ந்து வாழும் இப்பகுதி மக்களின் அவலம் தெரியவில்லையா?

மிதிவெடிகளை அகற்றும் நிபுணர்குழு யாழ். வருகிறது எனப் பல தடவைகள் செய்திகள் வெளிவந்தன. கடந்த வாரம் ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் ஒருவர் வந்து சென்றார். இரண்டு மாதங்களில் கண்ணிவெடிகளை அகற்றும் பணி ஆரம்பமாகும் எனச் சொல்லப்படுகிறது. எந்தெந்தப் பிரதேசங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்பது குறித்து தகவல் தெரியாது.

அப்பாவி மக்களின் வீடுகளைத் தரைமட்டமாக்கி கெடுதல் செய்தது மட்டுமன்றி மிதிவெடிகளையும் புதைத்துவிட்டு அவற்றை அகற்றாது அப்படியே விட்டுள்ளனர் அரச படையினர் யாரிடம் முறையிடுவது?

மக்கள் மனதை வெல்கிறோம் என்று பலவாறு கவர்ச்சிகரமாகப் பிரசாரம் செய்பவர்கள் இப்பகுதியில் காணப்படும் மிதிவெடிகளை அகற்றி இப்பகுதி மக்கள் தமது சொந்தப் பிரதேசத்தில் குடியேற வழி செய்வார்களா? அவர்களே நினைத்து அகற்றுவார்கள் என்று எத்தனை காலத்துக்குக் காத்துக் கொண்டிருக்க முடியும்?

புத்தூர் ஜி. ஜி. எஸ்

# ஈழத் தமிழ் சுருக்கெழுத்...

(ஏழாம் பக்கத் தொடர்)

கின்றது.

வட்டுக்கோட்டையை (அராலி) வதிவிடமாகக் கொண்ட ஆசிரியரின் வாழ்க்கைத் துணைவியார் மகாட்லசுமி அம்மை யாரும் சுருக்செழுத்துக்கலையில் ஒரு வல்லவராவார். இருவரும் மாணவர்களுக்கு இலகுவான முறையில் சுருக்கெழுத்தைப் போதிக்கத்தக்க வகையில் சுருக்கெழுத்து நூல்களையும் வெளியிட்டு சுருக்கெழுத்துக் கலை வளர்ச்சிக்கு உதவியுள்ளனர். இதன் காரணமாக ஆசிரியர் அவர்கள் ஈழத்து தமிழ் சுருக்கெழுத்துத் தந்தை என அழைக்கப்பட்டார்.

இவர் சேவையில் இருந்து ஒய்வுபெற்ற பின்னரும் திருநெல்வேலி சந்தை மேல்மாடியில் சில காலம் தனிப்பட்ட முறையில் எவ்வித விளம்பரமும் இன்றி மாணவர்களுக்குச் சுருக்கெழுத்தைப் போதித்து வந்தார். அவர் தன்னிடம் படிக்காத வேற்று முறைச் சுருக்கெழுத்தைப் போதிக்கும் இக்கட்டுரையாளர் போன்றவர்களுக்கும் அவ்வப்போது ஆலோசனைகள் வழங்கியமை அவரது நல்லெண்ணத்தை எடுத்துக்காட்டுகின்றது.

அவர் சுகயீனம் காரணமாக யாழ்ப்பாண வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 1989 மே 13 ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார். எனினும் இவரது சேவையை தமிழ் கூறும் நல்லுலகமும் சுருக்கெழுத்துக்கலை ஆர்வலர்களும் என்றும் நினைவு கூர்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீளக்குடியமர்வு கொடுப்பனவு பெற

# வடமராட்சி கிழக்கு மக்கள் அலைச்சல்

செம்பியன்பற்று, மே 13

மீளக்குடியமர்வுக் கொடுப்பனவைப் பெற வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குவதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் இருந்து வன்னிக்கு இடம்பெயர்ந்து சென்று மீளவும் குடியேறியவர்களுக்கும்—

வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து சென்று வசித்தவர்களுக்கும்—

மருதங்கேணி பிரதேச செயலகம் அண்மையில் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவுக்கான விண்ணப்பப்படிவங்களை விநியோகித்திருந்தது.

அத்துடன் உடனடியாக வங்கியில் கணக்கு ஒன்றை ஆரம்பிக்குமாறும் கோரியிருந்தது.

ஆனால் தற்போது வடமராட்சி, தென்மராட்சிப் பிரதேசங்களில் இடம் பெயர்ந்து வசித்தோர் தாங்கள் இருந்த பகுதியில் நிவாரணம் பெற்றதுக்கான கிராம சேவகரின் உறுதிப்படுத்தல் கடிதத்தினைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வடமராட்சி, தென்மராட்சி பிரதேசங்களில் இடம்பெயர்ந்து வசித்த வடமராட்சி கிழக்கு மக்களுக்கு இலவச நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை.

தென்மராட்சியில் வசித்த வடமராட்சி கிழக்கு மக்களுக்கு தென்மராட்சி கிராம சேவகர்கள் தமது பிரிவில் வசித்தமைக்கான உறுதிப்படுத்தல் கடிதத்தினை வழங்கி வருகின்றனர்.

இதேவேளை வடமராட்சியில் வசித்த வடமராட்சி கிழக்கு மக்களுக்கு உறுதிப்படுத்தல் கடிதங்களை வழங்க வடமராட்சி கிராம சேவகர்கள் தயங்குவதாகக் கூறப்படுகிறது. (இ-36-7)

## 200 தாதியர்களுக்கு ஆஸ்பத்திரியில் வெற்றிடம்

யாழ்ப்பாணம், மே 13

யாழ். போதனா வைத்தியசாலையில் டாக்டர்கள் பற்றாக்குறைக்கு மேலதிகமாக 200 தாதியருக்கான வெற்றிடமும் நிரப்பப்படாமலுள்ளது.

தாதிகள் பற்றாக் குறையினால் சில விடுதிகளைத் திறக்க முடியாதிருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

409 தாதியர்கள் கடமையாற்ற வேண்டிய ஆஸ்பத்தியில் தற்போது இருநூறு தாதியர்கள் வரையே கடமையாற்றி வருகின்றனர்.

போதிய எழுது வினைஞர்கள் இல்லாமையினால் வைத்தியசாலை நிர்வாகத்தை நிர்வகிக்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. இந்த வைத்தியசாலைக்கு தற்போது உடனடியாக 16 எழுது வினைஞர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

எழுது வினைஞர்கள் நியமனம் தொடர்பாக ஆஸ்பத்திரி நிர்வாகத்தினால் சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் இந் நியமனம் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இதேசமயம் யாழ். வைத்தியசாலையில் தொடர்ந்தும் சில மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரி நிர்வாகம் விண்ணப்பிக்கும் அளவு மருந்துகளை கொழும்பிலிருந்துஉடனுக்குடன் அனுப்பி வைக்கப்படாமையினாலேயே மருந்துப் பொருள்களுக்கு அடிக்கடி தட்டுப்பாடு ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டது. (இ-5)

## இந்தியத் தூதரக அதிகாரியை பாதுகாவலர் சங்கம் சந்திக்கும்

யாழ்ப்பாணம், மே 13

கைதானோர், காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள் இன்று யாழ். வரும் கொழும்பிலுள்ள இந்தியத்தூதரகத்தின் அரசியல் துறை கவுன்ஸிலர் சச்சதேவ்ராஜேஸ் குமாரை யாழ். செயலகத்தில்சந்தித்து மகஜர் ஒன்றைச் சமர்ப்பிக்கவுள்ளனர்.

சூரியப்பிரகாசம் இராணுவ நடவடிக்கையின் பின்னர் யாழ். குடாநாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் கைது செய்யப்பட்டு இதுவரை தகவல் தெரியாதிருக்கும் தமது பிள்ளைகளின் நிலைமை குறித்து உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டுமென மேற்படி சங்கத்தினர் தமது மகஜரில் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடன் தாம் நடத்திய பேச்சுக்கள் குறித்தும்—

அப்போது ஜனாதிபதி தெரிவித்த வாக்குறுதிகள் இன்னும் நிறைவேறாதது குறித்தும் — தாம் இந்திய தூதரகத்தின் அரசியல்துறை கவுன்ஸிலருடன் கலந்துரையாடவுள்ளதாக மேற்படி சங்க வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. (இ-7)

## 6 மாதங்களாகியும் சமுர்த்தி நியமனம் இல்லை

தென்மராட்சி, மே 13

பளைப் பிரதேசத்தில் சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள், முகாமையாளர்கள் ஆகியோரைத்தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு ஆறு மாதங்களுக்கு மேலாகியும் இதுவரை நியமனங்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலர் பிரிவுகளுக்கும் சமுர்த்தி ஊக்குவிப்பாளர்கள், முகாமையாளர்கள் நியமிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-117)


### ராஜா, யாழ்ப்பாணம்.

பல வருடங்களுக்குப் பின் மீண்டும் ஆரம்பம்!

சினிமா ரசிகர்களின் ஆவலைத் தீர்க்க ராஜா டாக்கீஸ் அகன்ற வெண்திரையில் நிறைந்த ரசிகர் கூட்டத்துடன் காட்சி அளித்துக்கொண்டிருக்கின்றது.

முன்னாள் தமிழக முதல் அமைச்சர்கள் மக்கள் திலகம் M.G.R., ஜெயலலிதா நடித்த—

ஜெமினி தயாரிப்பிலும் இலங்கையில் S. T. R. பிலிம்ஸ் பெருமையுடன் திரையிட்ட —

### ஒளி விளக்கு

M.G.R. இன் 100 ஆவது படம்

தினசரி புதிய நேரம்:- பிற்பகல் 1.00, 4.30 மணி சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் காலை 10.00, 1.00, 4.30 மணிக்கும் காட்சிகள் காண்பிக்கப்படும். (சி/3731)


## சிறுமி காயம்

யாழ்ப்பாணம், மே 13

வீட்டுக் கிணற்றில் தண்ணீர் அள்ளச் சென்ற சிறுமி ஒருத்தி மதிற் சுவர் வீழ்ந்ததில் காயம் அடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த மேனகா நடராசா (11 வயது) என்ற சிறுமியே காயமடைந்தவராவார். (உ-139)

## ஹண்டி கப்பல் வருகிறது

யாழ்ப்பாணம், மே 13

அரச திணைக்களங்களுக்கும் தனியாருக்கும் தேவையான பொருள்களை ஏற்றிக்கொண்டு ஹண்டி கப்பல் கொழும்பிலிருந்து காங்கேசன்துறை நோக்கிப் புறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்பொழுது காங்கேசன் துறையில் தரித்து நிற்கும் வாதுவ கப்பலில் பொருள்கள் ஏற்றப்பட்டு வருகிறது.

இக்கப்பல் காங்கேசன் துறையை விட்டு புறப்பட்டவுடன் ஹண்டி கப்பல் காங்கேசன்துறையை வந்தடையும். (இ-5)

## நகரில் சுரண்டல் சுவீப்!

குருநகர், மே 13

யாழ். மத்திய பஸ் நிலையத்தின் அருகில் சுரண்டல் மூலம் அதிர்ஷ்டம் பார்க்கப்படும் லொத்தர் சீட்டுகள் நேற்று முன்தினம் (11-5-98) தொடக்கம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

பத்து ரூபா கொடுத்து இச் சுரண்டல் லொத்தர்ச் சீட்டுகளை பலர் வாங்கி தமது அதிர்ஷ்டத்தை பார்த்தார்கள். ஆயிரம் ரூபாவுக்கு உட்பட அதிர்ஷ்ட சீட்டுக்களுக்கு லொத்தர் விற்பனையாளரால் உரியபணம் வழங்கப்படுகிறது. (உ-51)

## பயிலுனர் நியமனத்தில் தாமதம்

யாழ்ப்பாணம், மே 13

யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிக்கல்லூரிக்கு பயிலுனர்களை நியமிப்பதில் காலதாமதம் செய்யப்படுவதாகத் தெரியவருகிறது.

தற்போது இப்பயிற்சிக் கல்லூரியில் 85 தாதிப் பயிற்சியாளர்களே பயின்று வருகின்றனர். இவர்களில் 55 பேர் தமது பயிற்சியை முடித்துக் கொண்டு எதிர்வரும் ஜூன் மாதம் வெளியேறி விடுவார்கள்.

இவர்கள் வெளியேறிய பின் [illegible] 30 [illegible] தொடர்ந்து பயிலவேண்டிய நிலையிலுள்ளனர். (இ-5)

## புங்குடுதீவுக்கு மேலும் ஒரு பவுஸரில் நீர் வழங்க கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 13

புங்குடுதீவுப் பகுதிக்கு மேலும் ஒரு பவுஸர் மூலம் குடி தண்ணீர் வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

புங்குடுதீவில் நன்னீர் கிணறு இல்லாத காரணத்தினால் வேலணை சாட்டியிலிருந்து அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியினால் கிடைத்த பவுஸர் மூலம் குடி தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

பாடசாலைகள், வீதிகளில் அமைக்கப்பட்டுள்ள பொது குடி தண்ணீர் தாங்கிகள், வைத்தியசாலைகள் உட்பட புங்குடுதீவு மக்களின் குடி தண்ணீர் தேவையை இந்த ஒரேயொரு பவுஸர் மூலம் பூர்த்திசெய்ய முடியாதுள்ளது எனசுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேபோன்று இன்னொரு பவுஸரும் குடி தண்ணீர் வழங்கும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டால் மக்களின் குடி தண்ணீர் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## நெல்லியடி பெற்றோல் நிலையத்தில் தீ!

நெல்லியடி, மே 13

நெல்லியடிச் சந்திக்கு அண்மையில் அமைந்திருந்த பெற்றோல் நிலையத்தில் நேற்று நண்பகல் 12 மணியளவில் திடீர்த் தீ ஏற்பட்டது.

மோட்டார் சைக்கிள் ஒன்றை இயக்க முற்பட்டபோது, அதில் இருந்து பறந்த நெருப்பு பெற்றோலுடன் சேர்ந்ததால் தீ பரவியதாகத் தெரிவிக்கப்பட்டது. எனினும் பெரிய சேதம் ஏதும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-107)

## 3 சிறுவர்கள் காயம்

மட்டக்களப்பு, மே 13

மட்டக்களப்பு — வாழைச்சேனை வீதி, கிரான் என்னுமிடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கிரனேட் வெடிப்புச் சம்பவம் ஒன்றில் மூன்று சிறுவர் காயமடைந்தனர்.

மரமுந்திரிகைத் தோட்டத்தில் முந்திரிகைப் பழங்கள் சேகரிக்கச் சென்றசமயம் இச்சம்பவம் இடம்பெற்றது. (உ-21)

## மீளக் குடியமர்வு கொடுப்பனவு

யாழ்ப்பாணம், மே 13

யாழ். பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு இன்னும் 3 ஆயிரம் குடும்பங்களுக்கே வழங்கவேண்டி உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் பெரும் எண்ணிக்கையான குடும்பத்தவர்கள் ஏற்கனவே மீளக் குடியமர்வுக் கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபாவைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பெண் மரணம்

யாழ்ப்பாணம், மே 13

தக்காளிப்பழமும், இறாலும் சேர்த்துச் சமைத்த கறிசாப்பிட்ட சில மணி நேரத்தில் சோர்வும் மயக்கமும் ஏற்பட்டதாகத் தெரிவித்து கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் நேற்று அங்குமரணமானார்.

பண்டத்தரிப்பைச் சேர்ந்த தேவதாஸ் மரியலீலா (வயது 38) என்பவரே உயிரிழந்தவராவார்.

சில நாள்களுக்கு முன் இப் பெண்ணுக்கு அரணைகடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

## பலரைப் பாதிக்கும்...

(ஒன்பதாம் பக்கத் தொடர்)

உணவுத் தொகுதியிலிருந்து குருதிச் சுற்றோட்டத்தினுள் உறிஞ்சப்படுவதைக் குறைக்கும் எனவே போதியளவு பழங்களை எந்த உணவுடனும் நீங்கள் உட்கொள்ளலாம்.

### மரக்கறி

மரக்கறி வகைகளில் பழங்களைவிட அதிகளவு நார்ச்சத்து இருப்பதால் அவற்றைப் போதியளவில் உட்கொள்ள வேண்டும். பீற்றூட், சீனிஉருளைக்கிழங்கு, பூசனிக்காய், கரட் என்பனவற்றைகூட சிறிதளவில் உட்கொள்ளலாம், ஏனெனில் இவற்றில் உள்ள நார்ச்சத்துக்கள் குளுக்கோசு உறிஞ்சப்படுவதை வெகுவாகக் குறைக்கும்.

சோற்றிற்குப் பதிலாக நார்ச்சத்துக் கூடிய மரவள்ளி, கிழங்குவகை, பலா என்பவற்றை உண்ணவும். உங்களுக்குப் பொருத்தமான உணவு உங்களுடைய வைத்தியருடன் கலந்தாலோசித்த பின்னரே தீர்மானிக்கப்பட வேண்டும். எனினும் நாங்கள் நீரிழிவு நோயாளியின் உணவில் சாதாரணமாக உள்ளடக்கப்படக்கூடிய உணவுகளை இங்கே தருகிறோம்.

பொருத்தமானஉணவுப்பட்டியல்

காலை உணவு - சிவத்தச் சோறு சிவத்த அரிசி பொங்கல் கடலை/பயறு, குரக்கன் மாவும் சிவத்த அரிசி மாவும் சேர்த்து ஆக்கிய இடியப்பம், பிட்டு, அப்பம், ரொட்டி போதியளவு பழங்கள்.

மதிய உணவு: சிவத்தரிசிச் சோறு, பச்சை இலைக் கறிவகை, நார்ச்சத்துடைய மரக்கறிகள். கோழி இறைச்சி, மீன், அல்லது போதியளவு பழங்கள்.

இரவு உணவு: சிவத்தரிசிச் சோறு, மீன், கோழி இறைச்சி, குரக்கன் மாவும் சிவத்தரிசிமாவும் சேர்த்து ஆக்கிய இடியப்பம், பிட்டு, ரொட்டி, பச்சை இலைக் கறிவகை, நார்ச்சத்துடைய மரக்கறிகள் போதியளவு பழங்கள்.

இவற்றை எவ்வளவு எடுக்க வேண்டும் என்பதற்கு மருத்துவரின் ஆலோசனை பெற வேண்டும்.

காலை 10.00 மணிக்கும் மாலை 4.00 மணிக்கும்:-

குரக்கன் கிறீம் கிராக்கர், நிறிஸ்கோ, சீஸ்லற்ஸ் என்பன போன்ற சீனி இல்லாத விசுக்கோத்துகளுடன் சீனியில்லாத தேநீர்.

நீங்கள் உங்களுடைய தேநீரையும் மற்றைய உணவு வகைகளையும்செயற்கையாகச் செய்யப்பட்ட இரசாயனப் பொருள்களைப் பாவித்து இனிப்பாக்கிக் கொள்ளலாம்.

### நிறை

வயதுவந்தவர்களில் உயரத்திற்கேற்ற நிறை.

ஆண்கள்: 5 அடி-106 இறாத்தல். இதற்குக் கூடி ஒவ்வொரு அங்குலத்திற்கும் 6இறாத்தல் கூட்டவும்.

பெண்கள்: 5 அடி-100 இறத்தல் இதற்குக் கூடிய ஒவ்வொரு அங்குலத்திற்கும் 5இறாத்தல் கூட்டவும்

★

(நன்றி: இலங்கைநீரிழிவுச் சங்கம், தேசிய நீரிழிவுநிலையம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணிகள் கப்பல் சேவை நடத்த கோருகிறது ரெலோ

யாழ்ப்பாணம், மே 13

யாழ்ப்பாணத்தில் உள்ள பொதுமக்களின் போக்குவரத்துப் பிரச்சினைக்கு தீர்வு காண பயணிகள் கப்பல் சேவை ஒன்றைநடத்தவேண்டும்.

மேற்கண்டவாறு ரெலோ அமைப்பின் தூதுக்குழு ஒன்று வடபிராந்தியஇராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் எல். பி. பலகல்லவிடம் கேட்டுள்ளது.

ரெலோ அமைப்பின்முதல்வர் எம். கே. சிவாஜிலிங்கம், ரெலோ பிரமுகர் என். ஸ்ரீகாந்தா ஆகியோர் கொண்ட தூதுக்குழு நேற்று மேஜர் ஜெனரல் பலகல்லவுடன் நடத்திய பேச்சுக்களின் போதே மேற்கண்டவாறு கோரப்பட்டது.

அவரிடம் ரெலோ தூதுக்குழு முன்வைத்த ஏனைய கோரிக்கைகள் வருமாறு!

★ மீளக்குடியேறும் மக்களுக்கு போதிய வசதிகள் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

★ கப்பல், விமான பயணிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு, அவர்கள் சுலபமாக பயண அனுமதி பெற ஏற்பாடு செய்யவேண்டும்.

★ தொலைபேசி இணைப்பு வழங்குவதில் உள்ள தாமதத்தை நீக்க வேண்டும்.

★ குடாநாட்டில் சகல பகுதிகளுக்கும் தொலைபேசி வசதி செய்யவேண்டும்.

★ மீனவர்கள் மீன்பிடிப்பதில் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும்.

★ வல்வெட்டித் துறைக் கடற்பகுதியில் மீன்பிடிக்க அனுமதிக்கவேண்டும்.

★ காரைநகருக்கு நேரடியாக தினமும் பஸ்சேவை ஏற்பாடு செய்யவேண்டும்.

(உ-3)

## வாகனங்கள் கடத்தல்

வவுனியா, மே 13

காத்தான்குடியில் நேற்று இரு வாகனங்கள் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 5.44 மணியளவில் மரக்கறி வகைகளுடன் சென்ற வாகனம் ஒன்றும், 6.45 மணியளவில் கொக்கோலா சோடாக்களுடன் சென்ற வாகனம் ஒன்றுமே கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-164-3)

## இந்திய..

(முதலாம் பக்கத் தொடர்)

நாளை சந்தித்து கலந்துரையாடுவார்.

பொதுமக்கள் பிரதிநிதிகளைச் சந்திப்பதுடன் பல இடங்களுக்கும் அவர் விஜயம் செய்வார். (உ-3)

## காட்டிக்..

[முதலாம் பக்கத் தொடர்]

கள் என்றும்—

அக்குற்றங்களுக்கு இரண்டு வருடம் வரை சிறைத் தண்டனை வழங்க முடியும் என்றும்—

அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-2-6-21)

## புளொட்..

(முதலாம் பக்கத் தொடர்)

ஆகியோரும்—மரணமானார்கள்.

புளொட் உறுப்பினர்களான பாபு, லால், ராஜா, மோசஸ், லோறன்ஸ், கமலன் ஆகியோரும் —

பொதுமக்களான ஜெயந்தி (37 வயது), பாமினி துரைராஜா (17 வயது) ஆகியோரும்— காயம் அடைந்தனர்.

இச்சம்பவம் கோயில்குளம் இராணுவ சோதனை நிலையத்தில இருந்தும் 'புளொட்' அமைப்பின் தலைமையகத்திலிருந்தும் சுமார் 200 யார் தூரத்திலும், இராணுவவிமானத்தளத்துக்கு சமீபமாகவும் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இப்பிரதேசம் அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவத்தையடுத்து வவுனியாவில் உள்ள கடைகள் பூட்டப்பட்டன. கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டன. (உ-164-2-13)

## 'வெற்றி உறுதி'..

(முதலாம் பக்கத் தொடர்)

படைகளுக்கு மேலும் துருப்புகள் தேவைப்படுவதாகவும் —

அதற்காக மேலதிக துருப்புகளைத் திரட்டவும் —

தப்பியோடிய படையினரை மீளவும் படையில் சேரவைப்பதற்கும் —

அரசுத் தரப்பில் முழு மூச்சாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

"வெற்றி உறுதி" இராணுவ நடவடிக்கைக்கு எதிரான எதிர்த் தாக்குதல் ஓராண்டுப் பூர்த்தியை ஒட்டி இன்று வன்னியில் எழுச்சி நாள் கொண்டாட புலிகள் ஏற்பாடுகள் செய்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

"வெற்றியை எமதாக்குவோம்" என்ற தொனிப் பொருளுடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த எழுச்சி நாளையொட்டி பேரணிகளும், ஊர்தி பவனிகளும், கூட்டங்களும், கலை நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இந்த எழுச்சி நாளையொட்டி மஞ்சள், சிவப்பு கொடிகள், பதாகைகள் வன்னி எங்கும் கட்டப்பட்டுள்ளன.

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்சுவரர் ஆலயத்தில் விசேட அபிஷேக ஆராதனைகளும் நடைபெறவிருக்கின்றன.

எழுச்சி நாளையொட்டி விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரன் விடுக்கும் விசேட செய்தி இன்றுகாலை 8.30 மணிக்கு 'புலிகளின் குரல்' வானொலி மூலம் ஒலிபரப்பப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3-6)

## வெபர்..

[முதலாம் பக்கத் தொடர்]

தல் அலங்காரங்கள், வெசாக் கூடுகள் என்பன செய்யப்பட்டிருந்தன. அவற்றைப் பார்வையிடுவதற்கு பொதுமக்களை நேற்று ஆறு மணிக்குப் பின்னர் மைதானத்திற்குள் அனுமதிக்க படையினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

அவ்வேளையில் இந்தஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் நேற்று முன்னிரவு கணிசமான எண்ணிக்கையானோர் வெசாக் கூடுகளைப் பார்வையிட்டதாக மட்டக்களப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (உ-21)

## கான்ஸ்டபிள்..

(முதலாம் பக்கத் தொடர்)

தன்னிடம் இருந்த ரி56 ரகத் துப்பாக்கியால் கான்ஸ்டபிளைச் சுட்டுவிட்டுத் தப்பிவிட்டதாகவும்—

தெரிவிக்கப்பட்டது.

பிரசன்ன பண்டார என்ற அந்த கான்ஸ்டபிள் காயமடைந்த நிலையில் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(உ-164-3)

## சூட்டுக்கு இலக்கான இளைஞர்

மட்டக்களப்பு – கல்முனை வீதி, மஞ்சந்தொடுவாய் என்னுமிடத்தில் முன்னாள் புளொட் உறுப்பினரொருவர் நேற்று மாலை இனந்தெரியாதவர்களால் சுடப்பட்டார்.

விஜயநாதன் வித்தியாதரன் (27 வயது) என்ற இந்த நபர் மஞ்சந்தொடுவாய் பொலீஸ் சோதனைச் சாவடியில் இணைந்து செயல்படுபவர் எனத் தெரியவருகிறது.

மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் இவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-21)

## ஆயுள் அதிகரிக்கும்

அடுத்த நூற்றாண்டில் மேலும் அதிகமான மக்கள் ஆரோக்கியத்துடனும், நீண்ட ஆயுளுடனும் இருப்பார்கள் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவிக்கிறது. (இ-6)

## புல்மோட்டைப் பகுதியில் மோதல் சம்பவங்கள்

வவுனியா, மே 13

திருகோணமலை புல்மோட்டையில் அரசடிச்சந்தி என்னும் இடத்தில் நேற்று குண்டு ஒன்றைச் செயலிழக்கச் செய்து விட்டுத் திரும்பிய படையினரை வழிமறித்துப் புலிகள் தாக்குதல் நடத்தியதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தாக்குதலில் ஏற்பட்ட சேத விவரம் தெரிய வரவில்லை.

இதேவேளை புல்மோட்டையை அடுத்துள்ள கடற்பகுதியில் புலிகளின் ஆறு படகுகள் மீது நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் கடற்படையினர் தாக்குதல் நடத்தியதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

(உ-3-6-164)

## குடாநாட்டில் மழை

குடாநாட்டில் பரவலாக நேற்றுக் கடும் மழை பெய்ததால், தாழ்ந்த பகுதிகளில் வெள்ள நிலைமை ஏற்பட்டது.

இந்த மழை காரணமாக யாழ். ஆஸ்பத்திரியில் சில வார்ட்டுக்களிலும் வெள்ளம் காணப்பட்டது.

வார்ட்டுக்களின் ஓடுகள் சீராக இல்லாததால் ஒழுக்கு காரணமாகவே வார்ட்டுக்களில் வெள்ளம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சத்திரசிகிச்சை வார்ட்டான 24 ஆம் வார்ட்டிலும் வெள்ளம் ஏற்பட்டது.

(உ-51)

## பிரதி அமைச்சரின் வாகனம் விபத்தில்

பிரதியமைச்சர் மகிந்த விஜயசேகர தமது குடும்பத்தவருடன் பயணம் செய்த கார் கண்டிக்கு அருகே நேற்றுப் பிற்பகல் விபத்துக்குள்ளானது. விபத்தில் காயமடைந்த அமைச்சரின் மனைவியும் நான்கு பிள்ளையும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

தலதா மாளிகையில் நடைபெற்ற வெசாக் வழிபாட்டு நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய பின்னர், அமைச்சரும் அவரது குடும்பத்தவர்களும் கொழும்பு திரும்பிக்கொண்டிருந்த சமயம் அவர்களின் வாகனம் விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-21)


நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்

மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவும் நவோத்திர சகஸ்த்ர சங்காபிஷேகமும் (1009)

அம்பிகை அடியார்களே!

நிகழும் ஸ்வத்தி ஸ்ரீ மங்களகரமான வெகுதானிய வருஷம் வைகாசி மாதம் முதலாம் திகதி (15 - 5 - 98) வெள்ளிக்கிழமை மூல நட்சத்திரமும் சதுர்த்தித் திதியும் அமிர்தசித்த யோகமும் கூடிய சுப தினத்தில் காலை முதல் அம்பாளுக்கு மகா சங்காபிஷேகமும் விஷேட அபிஷேக பூஜை ஆராதனைகளும் நடைபெறும்.

அன்றைய தினம் மாலை 5.00 மணி முதல் விசேட பூசையும் தீபாராதனைகளும் நடைபெற்று அம்பிகைக்கு திருவூஞ்சலும், பின்னர் விநாயகப் பெருமான், வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமணியப் பெருமானுடன் அம்பாள் கைலாச வாகனத்தில் எழுந்தருளி வீதியுலாவரும் அருட்காட்சியும் இடம் பெறும்.

விஷேட நாதஸ்வரக் கச்சேரியும் பண்ணிசைக் கச்சேரியும் நடைபெறும். அம்பிகை அடியார்களுக்கு அமுதசுரபி அன்னதான சபையினரால் அன்னதானம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன் வழமைபோல் போக்குவரத்து ஒழுங்குகளும் குடி தண்ணீர் வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

அடியார்கள் யாவரும் அம்பிகையின் இப்பெருவிழாவில் கலந்துகொண்டு அம்பிகையின் அருளாசிகளைப்பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,
நயினாதீவு.

(சி/ 3692)



Institute of Informatics Studies
Jaffna, Sri Lanka.

புலமைப் பரிசில் திட்டம் - 1998
போட்டிப் பரீட்சை

திகதி: 17 - 05 - 1998 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: 10.00 மணி [இலங்கை நேரம்]

பரீட்சை நிலையங்கள்:

வலிகாமம்:- யாழ். மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.
தென்மராட்சி:- சாவகச்சேரி றிபேக் கல்லூரி, சாவகச்சேரி.
வடமராட்சி:- வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை.

பரீட்சார்த்திகளுக்கு உரிய அனுமதி அட்டைகள் யாவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதுவரை கிடைக்கப்பெறாதவர்கள் 16-05-1998 க்கு முன் அலுவலகத்துடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

- DIRECTOR

I.I.S.
68, CLOCK TOWER ROAD,
JAFFNA.

[சி/3734]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13-05-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org